உ

முருகா.

# அறுபடை வீடு அழகனைப் பாடு!

மனமெனு மில்லம் மலர்ந்திடும் வேலன் மண்ணிலுந் தனக்கென ஆறு ;
தினம்மகிழ்ந் திடவே திருவளர் வீடு தேடினன் நீயதைக் கூறு !
பூவினைச் சுற்றிப் போயுடன் வந்து புசித்திடக் கனியிலை என்று ;
ஆவினன் குடியில் ஆண்டியி னுருவில் அமர்ந்தனன் குழந்தையுஞ் சென்று!

பஞ்சாட் சரத்தின் பயனும் பொருளைப் பகர்ந்தே சங்கரர்க் கன்று ;
கொஞ்சும் வளமார் சுவாமி மலையில் குருவாய் வளர்ந்தனன் நின்று !
தாரா சுரனின் தலையது கிள்ளித் தணிகையி லெழுந்தவன் சுப்பன் ;
வாரா திங்கு வாழ்வுக ளில்லை வணங்கிடு வோமவ னப்பன் !

திருப்பரங் குன்றில் திருமாற் செல்வி தெய்வ யானையைக் கூடி ;
விருப்புட னங்கே வீற்றிருக் கின்ற வேலனைத் தொழுவோம் நாடி !
வந்தோர் சூரனை வதம் செய் தேயுயர் வாகை சூடியோன் வாழ்க !
செந்தூ ரிலங்கும் சேவற் கொடியோன் சிவனருட் செல்வன் வாழ்க !

அழகரின் கோயில் ; அடைந்திரு மங்கை அணைந்திருந் தருளினை ஈவான் ;
பழமுதிர்ச் சோலை பரவிடு மழகன் பாருல கோர்க்கனி யாவான் !
அறுபடை வீடு ; அமர்ந்தவ னோடு அனுதினம் நீமனங் கூடு ;
உறுபகை வாடும் ; உடற்பிணி ஓடும் ஓயா தவன் புகழ் பாடு !

— டெக்கேல்பட்டி எம். பிலவேந்திரன்.

# திருமுருக. வாரியார் சுவாமிகள் மணி விழா.

நாளது பராபவஹு ஆவணிமீ 5௨ (21—8—66) ஞாயிறன்று சுவாதி நட்சத்திரம் நிறைந்த நன்னாளில், வள்ளல் வள்ளிமணாளப் பெருமான் வற்றாத கருணையால் நமது தமிழகம் போற்றும் பெரியாரும், மூலிகை மணி ஆசிரியருடைய குருநாதருமான, அருள்மொழியரசு திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்களுக்கு 60-வது ஆண்டு நிறைவெய்துகிறது. 50-வது வயது நிறைவை மதுரையில் பொன் விழாவாகக் கொண்டாடிப் போற்றினோம். இப்போது மணி விழா எய்தியுள்ளது

ஒரு நாளைக்கு 24-மணி நேரம் என்பதை 48-மணி நேரமாக ஆண்டவன் அனுமதித்திருக்கக் கூடாதா? என ஓய்வின்றி உலக மக்கள் வாழ உழைக்கும் உத்தமப் பெரியார் நமது 'வாரியார் சுவாமிகள் அவர்கள் வயது உயர உயர ஓய்வை நாடுவது வையத்து மாந்தர் இயல்பு. ஆயின் நமது பேரன்பு சான்ற பெரியார் அவர்களோ, வயது வளர வளர தொண்டாற்றுவதையும் உயர்த்திக்கொண்டே இருக்கின்றார்!

மாலையில்தான் சொற்பொழிவு நிகழும். இவர் காலையிலும் சொற்பொழிவு. கடும் பகலிலும் சொற்பொழிவு. மாலையிலும் சொற்பொழிவு. நள்ளிரவிலும் சொற்பொழிவு. யாருக்காக இந்த உழைப்பு? தம் பொருட்டன்று! அன்பர்கள் உய்யவும், அறப்பணிகள் வளரவும் ஓயா உழைப்பு. பேய்களும் அஞ்சும் பிரயாணம். வாயுவேகம் மனோவேகமான விரைவு. இராட்சத இயந்திரமும் நடுங்கும் ஓய்விலா உழைப்பு. நித்ராதேவி நெருங்க அஞ்சுகின்றாள். காலையில் கந்தவேள் பெருமான் பூஜை. வந்த கடிதங்களை வாசித்தல், விடை வரைதல், இடை யிடையே காண வருவோருக்கு இன்னுரை வழங்கல். சலிப்பின்றி சிபார்சு கடிதங்கள் தருதல், நேரிலும் சென்று ஆதரிக்கக் கோருதல். ஆ! ஆ! ஒவ்வொரு நாளும் இதே தியாகத் தொண்டுகள்தான் பெரியார் அவர்கட்கு. இல்லையென்று இயம்பத் தெரியாதவர்!

இங்ஙனம் சைவமும், தமிழும் வாழ தேவாரத் திருமுறைகள், திருப்புகழ் திக்கெட்டிலும் துலங்க, ஆத்திகம் அகிலமெலாம் விளங்கத் தொண்டாற்றும் நமது வாரியார் சுவாமிகள் அவர்களின் மணிவிழாவை தமிழகம் எங்கும் அன்புடன் நடத்த அன்பர்கள் முனைவார்களாக.

விரிவுரைக்கு வரும் பெருந்தொகைப் பணம் அவ்வளவும் அறப்பணிகளுக்கு நன்கொடையாக வழங்கிவிட்டு, வழிச் செலவிற்கு கடன் வாங்கும் வள்ளல் அறிஞரைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இந் நூற்றாண்டு கண்ட மகா புருஷராவார் இவர். நடமாடும் கலைக் களஞ்சியமான இவர் கலங்கரை விளக்கென மக்கள் உய்ய ஒளிபரப்பி வருகின்றார். இவ்வுத்தமப் பெரியாரின் மணி விழாவை ஒவ்வொரு ஊரிலுமுள்ள அன்பர்கள் சிறப்பாகக் கொண்டாடித் திருவருளும் குருவருளும் பெற்று மகிழ வேண்டுகின்றோம். அன்று காலையில் ஆலயங்களில் அபிஷேக வழிபாடும், இயன்றவரை ஏழைகட்கு அன்னம் வழங்கியும், மாலையில் சமயச் சொற்பொழிவும் நடத்தி மணிவிழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறோம். மற்றுமொரு அறுபதாண்டு ஆசிரியர் அவர்கள் மகிழ்வுடன் வாழ, வெற்றி வேற்கரத்து உண்ணலை வேண்டி வழிபடுவோமாக.

— அன்பன் மு. பெருமாள்.

# மூலிகைமணி மருத்துவ மாத இதழ்.

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்,

ஆ. இரா. கண்ணப்பர், *R. M. P. Regd.*

ஆண்டு சந்தா : ரூ. 5—00 : : தனிப்பிரதி : 50 காசு

ஆறு மாத சந்தா கிடையாது.

## வைகாசி இதழில்

| | | | |
|---|---|---|---|
| 1. | அறுபடை வீடு அழகனைப் பாடு ! | ... | 1 |
| 2. | திருமுருக வாரியார் சுவாமிகள் மணிவிழா | ... | 2 |
| 3. | கார்ட்டூன் | ... | 4 |
| 4. | மூவாசைத் தடைகள் (தலையங்கம்) | ... | 5 |
| 5. | நம் நாட்டு மூலிகைகள் (81-வது கட்டுரை) | ... | 7 |
| 6. | மானிட உடலியல் | ... | 13 |
| 7. | திருநீற்றின் மகிமை | ... | 18 |
| 8. | நோயும் மருந்தும் | ... | 23 |
| 9. | இலட்சியவாதி | ... | 33 |
| 10. | அத்வைதம் | ... | 35 |
| 11. | பாம்பு | ... | 37 |
| 12. | நலங்கெடும் திரைப்படம் | ... | 39 |
| 13. | சிகா மந்திரம் | ... | 42 |
| 14. | விஷ ஜந்துக்களும் மூலிகைகளும் | ... | 46 |
| 15. | இதய ஒலி ! | ... | 49 |
| 16. | தணிகை அபிஷேக விழா அறிக்கை | ... | 51 |

போன் நெ. 726 : : தபால் பெட்டி நெ. 26

அலுவலகம் :— 33-1, தென்னமரம் தெரு, வேலூர். (வ. ஆ.)

மூலிகை மணியில் வெளியாகும் கட்டுரைகள் பதிப்பகத்திற்கே உரியது ஆசிரியர் உரிமையின்றி யாரும் பயன்படுத்தக் கூடாது. கதை, கட்டுரையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் கற்பனையே; யாரையும் குறிப்பிடுவதல்ல.


கார்ட்டூன்
டானிக் சாப்பிடு
யானை பலம் வரும்!
VITA
BCO
புட்டி புட்டியா டானிக்
சாப்பிட்டேன்! என்
பணம் போனதோடு
பலமும் போய் கோவணா
ண்டியாகி விட்டேன்!
போதும் டானிக்!

உ

முருகா.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே

# மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே. - (தாயுமானவர்)

மலர் 2 பராபவ ௵ வைகாசி ௴ (மே 66) இதழ் 7

## மூவாசைத் தடைகள்!

மனிதராய் பிறந்த ஒவ்வொருவருக்கும் உலக வரம்பிற்குட்பட்ட அபிலாஷைகள் மூன்று உண்டு. ஒவ்வொருவரும் இதை தேடித்தான் ஆகவேண்டும். அதாவது 1. மண், 2. பெண், 3. பொன், ஆக இந்த மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இவைகளை வெறுத்து தள்ளிய வர்களே ஞானிகள்; முற்றும் துறந்த முனிவர்கள் எனப்படுவர்.

1. **மண் ஆசை:** மண்ணில் பிறந்தவர்கள் வாழவும் இருக்கவும் உணவுக்காக தானியங்களைப் பயிரிடவும் பூமி அவசியம். நமது நாட்டில் நில மசோதாவில் ஏற்பட்ட பல சட்டங்களால் பயிரிடும் குடியானவர் களுக்கு கொஞ்ச நஞ்சமிருந்த நிலபுலன்கள் எல்லாம் பாதிக்கப்பட்டது. அதாவது கொழுத்தவன் மேலும் கொழுத்து விடவும், இளைத்தவன் மேலும் இளைத்து கடனாளியாகி வறுமையில் உழன்று வாடுகிறான் என்பது கண்கூடாக காணும் சம்பவமேயாகும்.

**2. பெண் ஆசை :** இது உலக மாயையின் பிரதானமான அம்சம். பெண் இனம் இல்லையாயின் மனித சமுதாயமே இல்லை. எனவே சக்தி இல்லையேல் சிவன் இல்லை. மற்றய உலக நாடுகளில் எல்லாம் அதிகப் பிள்ளை பெற்று எடுக்கும் தாய்மார்களுக்கு வீரத்தாய் என்ற பல பட்டங்களும், பராமரிப்பும் உண்டாக்க சட்டமியற்றி வருகிறது. ஆனால் நமது தார்மிக எண்ணங் கொண்ட சுதந்திர நாட்டில் கருத்தடையை சட்டமாக்கி, கருத்தடை செய்து கொள்பவர்களுக்கு பரிசுப் பணமும் கொடுக்க முன் வந்துள்ளது விந்தையான விஷயமாகும். மேலும் செயற்கையில் கருத்தடைக் கருவிகளை அணியும் 'லூப்' என்ற மிருகச் செயலையும் மிஞ்சும் செய்கையில் அக்கரை காட்டுகிறது. இதனால் மக்களிடையே மனக் கட்டுப்பாடும், ஒழுக்கமும் குறைந்து இஷ்டப்படி நடந்து உடல் ஆரோக்கியத்தை இழக்கவும், நோயாளி நாடாகவும் ஆகுமே தவிர, கருத்தடை வெற்றியாகாது. இப்படிக் கூறுவது கருத்தடை வேண்டாமென்று பொருள் அல்ல. நமது அண்ணல் காந்தி அடிகள் கருத்தடையை பற்றி என்ன கூறியிருக்கிறார் என்பதை சிந்தித்து செயலாற்ற வேண்டும். நாட்டுப் பிரஜைகளாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் சுயக் கட்டுப்பாடு, உடல் ஒழுக்கம், மன ஒழுக்கம், தெய்வபக்தி, நாட்டுப் பற்று ஆகியவைகளில் ஊக்கம் காட்டும் விதிமுறைகளை போதிப்பதாலும், இந்த முறைகளை சட்டமாக்குவதாலும் இயற்கை முறையில் பிண்டோற்பத்தி குறைய ஏதுவாகும். ஆண்டவன் கொடுத்த இயற்கை உறுப்புகளை அறுத்து எரிவதாலோ; மாத்திரைகளை கருத்தடைக்கு உபயோகிப்பதாலோ திட்டம் வெற்றி பெறும் என்று எண்ணுவது மதியீனம். கருத்தடை மாத்திரைகளை சாப்பிட்டதால் நிறைய தீங்கும், ஆயுள் குறைவு, இருதய பலஹீனம்; வயிற்றுக் கோளாறுகள் ஏற்படுகிறதென்று அமெரிக்க அரசாங்கமே ஒப்புக் கொண்டு அதற்கு தடை விதித்துள்ளது என செய்திகளில் தெரிவருகிறது.

**3. பொன் ஆசை :** பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்பது பழமொழி. பணத்தின் மதிப்பு ஏறுவதும், இறங்குவதும் தங்கத்தின் இருப்பைப் பொறுத்துள்ளது. ஒரு நாடு தங்கத்தை எவ்வளவு இருப்பு வைக்கிறதோ அவ்வளவு மதிப்பு உலக நாடுகளில் ஏற்றமிகுந்த நாடு என்பது பொருள். ஆனால் அந்தத் தங்கத்தை நாம் வைத்திருக்கக் கூடாது என்பது தற்போதைய சட்டம். தங்கம் வைத்திருப்பதே குற்றம். அரிசியில் மண் கலந்து விற்றால் அது கடவுளுக்கும் பொறுக்காத ஓர் குற்றம். ஆனால் தங்கத்திலே செம்பு கலந்து 14 காரட் ஆக்கிக்கொள்ளலாம். ஒரு நல்ல பொருளை உதாரணம் காண்பிக்க "**பத்தரை மாற்றுத் தங்கம் போல**" என்று சொல்வதுண்டு. அந்த பத்தரை மாற்றுத் தங்கத்தை இப்போது கண்ணால் பார்க்க முடியாது. எனவே மேல்கண்ட விஷயங்களை ஆராயும்போது மண், பெண், பொன் மூவாசைகளும் துறந்து விட வேண்டும் என்பதை மறைமுகமாக சட்டம் கூறுவதுபோல் இருக்கிறதல்லவா? நம் நாட்டிற்கும் மக்களுக்கும் ஏற்பட்ட சோதனை காலம் இது! என் வீடு, எனது மனைவி, மக்கள் எனது உடமை என்ற காலம் சிறுக சிறுக மலையேறி வருகிறது. வருங்காலத்தில் இன்னும் என்ன பண்பற்ற புதுமைகளை காணப்போகிறோமோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

★

உ

முருகா.

# நம் நாட்டு மூலிகைகள்

## 81-வது கட்டுரை

நாயகன் என்றால் தலைவன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் சிலந்தி நாயகன் என்ற மூலிகைப் பற்றித் தெரியுமோ என்றால், தெரியாது என்ற விடைதான் அநேகமாக கிடைக்கும். காலம் செல்லச் செல்ல, நாகரீகத்தின் முதிர்ச்சியால் வழக்கொழிந்த மூலிகைகள் பல. சில அபூர்வ மூலிகை இனங்கள், இயற்கைப் பாதுகாப்பின்றி அதன் இனமே அழிந்துவிட்டது! சப்பாத்திப் போன்ற முட்புதர்களுக்கு ஒருவித நோய் பிடித்து அழிந்த காரணத்தால் நல்ல பல மூலிகைகளை ஆடுமாடுகள் மேய்ந்து வம்ச விர்த்தி இல்லாமல் போனது. மேலும் மக்கள் நவீன நாகரீக ஊசி, மாத்திரைகளைத் தேடச் செல்லும் ஆர்வத்தை நான்கில் ஒரு பங்காவது இயற்கையில் வளரும் தாவர இனங்களில் கவனம் செலுத்தி இருப்பின், நாட்டின் ஆரோக்கியத்திற்கு பங்கம் ஏற்பட்டிருக்காது அல்லவா?

சிலந்தி நாயகன் என்ற இது தரையில் படர்ந்து வளரும் செடியினத்தைச் சேர்ந்தது. கலியாண முருக்கன் பள்ளிச் சிறுவர்களுக்கு நண்பன் என்று முன்னமே கூறியுள்ளேன். அது போல இந்த சிலந்தி நாயகனும் பள்ளிச் சிறுவர்கள் அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான்! இப்படிச் சொன்னவுடன் வாசக அன்பர்கள் தங்கள் வீட்டில் உள்ள பள்ளிச் சிறுவர்களை அழைத்து; தம்பீ!... உனக்கு சிலந்தி நாயகன் தெரியுமோ? என்று கேட்டால், அவன் திருதிரு வென்று தான் விழிப்பான்! எனவே இவர்களுக்கென்றே ஓர் தனி பாஷை உண்டு. அதாவது கலியாண

முருங்கையை - நெருப்புக் கொட்டை மரம் என்பது போல், சிலந்தி நாயகனுக்கு - 'பட்டாஸ் காய் செடி' என்று சொல்லுவார்கள். இப்படிச் சொன்னால் போதும், இந்த மூலிகையை எங்கிருந்தாலும் ஒரு நொடியில் கொண்டு வந்து விடுவார்கள். சில மூலிகைகளை நமக்கு தெரியாமல் விழிக்கும்போது பையன்கள் எனக்குத் தெரியும் என்று சொல்லிக் கொண்டு அதை உடனே நமக்கு நேரில் காட்டுவது, நமக்கு வெட்கமாக இருக்கும். இவ்வளவு வயதாகியும் இதை நாம் தெரிந்துக் கொள்ள முடியவில்லையே என வருந்துவோம்.

இந்தப் 'பட்டாஸ் காய் செடி' சிறுவர்களுக்கு ஒரு வேடிக்கையான பொழுது போக்கு! இதன் இலை மத்தியில் அகலமாயும் இலைக் காம்பிலும் நுனியிலும் குறுகி சுமார் ஒரு தேக்கரண்டி முதல் மேசைக் கரண்டி அளவுடன் தட்டையாகி நல்ல பசுமை நிறத்துடன் காணும். இலைகள்

# ★ சிலந்தி நாயகன் ★

## (என்கிற)

## பட்டாஸ் காய் செடி

நேருக்கு நேராக, எதிரே ஜதை ஜதையாக காம்பிற்கு இரண்டங்குலம் இடைவெளி விட்டு வளரும். செடிக் காம்பிற்கும் இலைக் காம்பிற்கும் மத்தியில் பூக்களின் மொட்டுக்கள் விட்டு பிறகு மலரும். இம் மலர் சில இடங்களில் நீல நிறமாகவும், வெள்ளை நிறமாகவும் இருப்பதுண்டு. மலர்கள் உதிர்ந்ததும் அதிலிருந்துதான் சிறுவர்கள் கூறும் இந்த பட்டாஸ்காய் பிஞ்சு விடுகிறது. முதலில் பச்சை நிறமாக பெரிய கோதுமை அளவுடன் இருக்கும். முற்றிக் காய்ந்ததும் பழுப்பு நிறமாக உலர்ந்து இருக்கும். இந்த காய் மேல் தண்ணீர் பட்டால் 'பட்' என்ற சப்தத்துடன் வெடிக்கும். எனவே பள்ளிச் சிறுவர்கள் இதை சேகரிக்கும் பொருட்டு தேடித் திரிந்து எடுத்து வந்து மற்ற சிறுவர்கட்கு உமிழ்நீரால் அதை நனைத்து 'பட்' என்று வெடிக்கச் செய்வார்கள்.

மழை காலத்தில் இந்த பட்டாஸ் காய்ச்செடியின் உலர்ந்த காய்கள் வெடித்து அதன் உள்ளே இருக்கும் விதைகள் நாலாபக்கமும் சிதறி தன்னிச்சையாக இனத்தைப் பெருக்கிக் கொள்ளும். சிலந்தி நாயகன்

செடி, தொட்டால் சிணுங்கி, வகுப்பைச் சார்ந்தது. மனிதர் தொட்டால் இந்த செடியின் இலை கிளை யாவும் வாடி வதங்கி போகும். ஆனால் காற்றடிப்பதாலோ மற்ற செடிகளின் இலைகளோ எதுபட்டாலும் தொட்டால் சிணுங்கி வாடுவதில்லை. மனிதர்களின் ஸ்பரிசம் பட்டால்



சிலந்திநாயகன்

மட்டுமே வாடுகிறது! அதுபோல இந்த சிலந்தி நாயகன் காய்கள் சும்மா இருக்கும்போது வெடிப்பதில்லை. தண்ணீர் பட்டால் போதும், பட்... பட்... என்று வெடிக்கிறது. உத்தாமணி, எருக்கன், இவைகளின் காய்கள் வெடித்தால் விமானத்திலிருந்து பாராச்சூட்டுகள் குதிப்பதுபோல

காற்றில் பறந்து பல மைல்களுக்கப்பாலும் சென்று தன் இனத்தைப் பெருக்குகிறது. இறைவனின் திருவருட் செயல்களை இத்தகைய காட்சிகளால் நாம் காணும்போது மனித சக்திக்கும் மீறிய பல அற்புதப்படைப்புகளை தாவர இனங்களில் புகுத்தி நமக்கு நல்லதோர் பாடங்களை ஆண்டவன் கற்பிக்கிறுர் என்றே எண்ணத் தோன்றுகிறது.

## பொதுக் குணங்கள்

இந்தப் பட்டாஸ் காய்ச் செடிக்கும் நல்ல பல மருத்துவக் குணங்களை இறைவன் அருளி இருக்கிறுர். பொதுவாக இதன் இலைச்சாறு கண்களுக்குத் தெரியாத கிருமி இனங்களையும், நுண் புழுக்கூட்டங்களையும் அழிக்கும் சக்தி கொண்டது. ரத்தத்தில் சேர்ந்த குற்றத்தை தூய்மை படுத்தும். பாம்பு கடி விடங்களும் இதன் இலையால் தீரும். அன்றியும் கண்களுக்கு தெரியாத உட்புண்கள், ரணம், கட்டிகள் ஆகியவைகளை போக்கும் சக்தியுடையது. பூ, பிஞ்சு இவைகளுக்கு கண் ரோகங்களைப் போக்கும் சக்தி உண்டு. இதன் வேருக்கு பூதம், பிரேத பிசாசு, ஆவியுலக மருள் போன்ற தோஷங்கள் விலகும்.

## முறை விபரங்களில் சில

**நகக்கண் சுற்று :** விரல்களின் முனையில் ஊதிப் புடைத்து சிவந்து விண், விண் என்ற வலியும் குடைச்சலும் உண்டாகி தாங்க முடியாத வேதனை தருவது இந்த நகக்கண் சுற்று. இதை ஆஸ்பத்திரியில் கொண்டு போய் காட்டி ஆப்பரேஷன் செய்து சிலசமயம் தையல் கூட போடுவதும் உண்டு. இந்த ரணம் ஆறுவதற்கு மாதங்கள் பலவாகும். இப்படிக் கலையாக நோயை வளர்த்துவிட்டது நவீன மருத்துவம். சிலந்திநாயகன் இலையை எடுத்து வந்து நீர் விடாமல் அரைத்து இந்த நகச்சுற்று விரலில் கட்டி வைக்க பட்டாஸ் காய் எப்படி வெடிக்குமோ அது போல கட்டியை உடைத்து அதிலிருந்து ரத்தம், சீழ், முளை யாவும் வெளியே இழுத்துக் கொண்டு வந்து நாலு நாளில் விரல் முன் போல் சரியாகி விடும். இது கைகண்ட பழங்கால முறை.

## கட்டிகளுக்குத் தலைவன்

சிலந்தி என்ருல் வீட்டின் கூரைகளில் உள்ள சிலந்திப் பூச்சிகளைக் குறிப்பாக பொருள் கொள்ளக்கூடாது. இங்கு சிலந்தி என்ருல் கட்டிகள் என்று பொருள். இரத்தத்தின் மாறுதல்களால் தூய்மை கெட்டு உடலில்

ஆங்காங்கே தங்கி கட்டிகளாக கிளம்புகின்றன. கட்டிகளில் பல விதம் உண்டு. அது எந்த வித கட்டியானாலும் சரி! இந்த சிலந்தி நாயகன் அவைகளுக்கு எல்லாம் தலைவன்! கட்டிகள் எங்கே யிருந்தாலும் சரி, கவலையை விடுங்கள். இலையை இடித்து பிழிந்து சாறு எடுத்து ஒரு தேக்கரண்டி அளவு சம அளவு காய்ச்சிய பசும்பாலில் கலந்து காலை மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வரவும். மேலுக்கும் கட்டிகளின் மேல் நீர் விடாமல் அரைத்து கட்டிவரலாம். உள்ளுக்குச் சாப்பிடுவதால் ரத்தத்தில் உள்ள கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் அழிந்து கட்டிகளை உண்டாக்காதவாறு தடுத்து ஏற்பட்ட கட்டிகளை கறைத்தும் தள்ளிவிடும். உடலின் உள்ளுறுப்புகளில் காணும் புற்று நோய் ரணங்களும் கூட இதன் இலைச் சாற்றால் குணமாகிறது. மேலும் ரத்தத்தில் உள்ள சர்க்கரையும் குறைந்து விடுகிறது! என்பது ஆச்சர்யப்படும் விஷயமாகும்.

## கண் ரோகங்களுக்கு

பட்டாஸ் காயின் பூக்களையும் இளம் பிஞ்சு காய்களையும் சிறிது எடுத்து 1 அவுன்ஸ் சுத்தமான பன்னீர் விட்டு அதில் பொறித்த படிகாரம் 4 அரிசி அளவு விட்டு நன்றாக கலக்கி 4 மணி நேரம் வைத்திருந்து பிறகு கண் கோளாறு, கண் வலிகள், பார்வை மங்கல், சிகப்பு நிறமாகி கூசுதல் போன்ற கண் ரோகங்களுக்கு தினம் 1க்கு 4 தடவை இரண்டு துளிவிட்டு வர அவை யாவும் நீங்கி கண் சுத்தமாகும். நல்ல பார்வையும் காணும்.

## வேர் குணம்

அஷ்ட கர்ம மூலிகையில் சிலந்தி நாயகனும் ஒன்று. அதாவது பூத மாரண மூலிகையாம்! அகால மரணத்தால் உடலில் இருந்து நீங்கிய உயிர்கள் தன் அபிலாஷைகளை (விருப்பங்களை) நிறைவேற்றக் கருதி உலகில் உள்ள மானிடர்களை பற்ற முயற்சிக்கும். இப்படி அருவமாக உலவும் ஆவிகளுக்கு பூத கணங்கள் என்பார்கள். தூய்மையற்ற பூதப் பிரேத, பைசாச ஆவிகள். கோழை நெஞ்சுடையவர்களையும், பயந்தாங் கொள்ளிகளாக இருப்பவர்களையும் பிடித்து (உடலோடு மனிதர்களாக இருந்தபோது) நிறைவேறாமல் போன காரியங்களைப் பூர்த்தி செய்ய முயற்சிப்பர். இதை பேய் பிடித்துள்ளது, பிசாசு பிடித்துள்ளது என்பது உலக வழக்கு. இத்தகைய பூத கணங்களின் செய்கையை முறித்துவிட பூத மாரண சக்தி கொண்ட மூலிகைகளின் மூலங்களில் சிலந்தி நாயகன் வேரும் பயன் படுகிறது. முறைப்படி இதனை காப்பு கட்டி வேர் அறாமல் எடுத்து உடலில் தரிக்க எந்த பூத கணங்களும் அந்த உடலைப் பற்றாமல் ஓடிப் போகும்! இதைப் பொய், புரட்டு என்று சொல்வாரும் உண்டு.

இதோ பாருங்கள் கும்ப முனிவரின் பாடல்:—

"சீதமறு மாவிடமும் தீரும்விழி நோயகலும்
பூதமொடு மருளும் போகும்காண் — மேதினியுள்
ஆயகத்துப் புண்கிரந்தி யாறுமயிலே! சிலந்தி
நாயகத்தினலே நவில். [கு. மு.]

## பாம்பு கடிகளுக்கு

சிலந்தி நாயகன், தும்பையைப் போல சகல பாம்பு கடி விடங்களை யும் போக்கும். முறை விபரம்: செடியை வேருடன் எடுத்து அலசி இடித்துச் சாறு பிழிந்து 2 அவுன்ஸ் உள்ளுக்கு கொடுத்து திப்பியை அறைத்து கடிவாயில் கட்டிவிட விஷம் யாவும் முறிந்துவிடும். பத்தியக் கட்டுப்பாட்டை தும்பைக்கட்டுரையில் கண்டு அதன்படி அனுசரிக்கலாம்.

சிலந்தி நாயகனை உபசரக்கு ஆக மேக ராஜாங்க எண்ணெகளில் கலந்து காய்ச்சுவது நாட்டு வைத்தியர்கள் பரம்பரை வழக்கமாகும். எனவே இதைத் தெரியாத நாட்டு வைத்தியர்கள் இருக்க முடியாது என்று துணிவாக கூறிவிடலாம். மஹா மூலிகை எண்ணெயிலும் இது சேர்க்கப் படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

சிலந்தி நாயகனை தெரியாதவர்கள் இனியாகிலும் வெட்கப்படாமல் பள்ளிச் சிறுவர்களைக் கேட்டு, அதனை தெரிந்து வைத்தால் பலருக்கும் நன்மை செய்யும் வாய்ப்பு கிடைப்பதுடன் தனக்கே ஆபத்து காலத்தில் உதவுமல்லவா?

---

## கவனிக்க!

மூலிகை மணி ஆரம்ப இதழ்கள் குரோதி ஆண்டு முதல் விசுவாவசு வரை காலிகோ பைண்டு செய்யப்பட்ட புத்தகங்கள் கைவசமில்லை. எனவே வாசக அன்பர்கள் பழைய பிரதிகள் தேவைக்கு இதழ் ஒன்றுக்கு 0-50 காசு அனுப்பினல் தனியிதழ் களாக அனுப்பி வைக்கப்படும்.

— மானேஜர்.

# ★ மானிட உடலியல் ★

[G. S. பசுபதி, B. A., L. T.]

## எலும்பு மண்டலம்

**பிராணிகளுள் நிமிர்ந்த நிலை பெற்றிருப்பது மனிதனின் தனிப் பெருமையாகும். இதற்குக் காரணமாக இருப்பது அவனுடைய எலும்பு மண்டலத்தின் சிறப்பான அமைப்புதான்.**

எலும்பு ஒரு வகை இணைப்புத்திசு. ஒரு எந்திரத்தில் பல்வேறு பாகங்கள் ஒன்றுக இணைக்கப்பட்டு, அது இயங்க உதவுவது போல், பல வடிவத்திலுள்ள எலும்புகள் ஒன்றுக இணைக்கப்பட்டு, நமக்கு ஓர் திட்டமான வடிவத்தைக் கொடுகிக்றது. அது மட்டுமின்றி, நம் உடலில் ஏற்படும் பல்வேறு இயக்கங்களுக்கு ஆதாரமாக இருக்கிறது. மற்றும் சில முக்கியமான உடல் உறுப்புக்களை (மூளை, தண்டுவடம், நுரையீரல்கள், இதயம், கண், போன்றவை) பத்திரமாக தீங்கு நேரிடாமல் காக்கின்றது.

எலும்பு ஓர் கடினமான பொருள். எலும்பில் பாதியளவு நீர் இருக்கிறது. கால்ஷியம் பாஸ்பேட், கால்ஷியம் கார்பனேட், போன்ற உப்புக்களும், பிராணிச்சத்தும் இதில் அடங்கி உள்ளன. ஆதலால், இவ்வுப்புக்கள் அதிகமாயுள்ள பால், தயிர், மீன் ஈரல் எண்ணெய், கீரை, வகைகள், முதலிய நம் உணவில் அதிகமாக சேர்ந்தால், நம் எலும்பு மண்டலம் நல்ல வளர்ச்சியும் வலிவும் பெற உதவும்.

நம் உடலில் 206 எலும்புகள் உள்ளன. குழந்தைப்பருவத்தில் இன்னும் 7 எலும்புகள் அதிகமாக இருக்கும். குழந்தை வளர வளர, இந்த எலும்புகள் ஒன்றுக சேர்ந்து விடுகின்றன. மண்டை ஓட்டில் 22, மார்பகத்தில் 25, முதுகெலும்புத் தொடரில் 26, காதுகளில் 6, தோள் வளையத்தில் 64, இடுப்பு வளையத்தில் 62, ஆப்பு எலும்பு ஒன்றுமாக (Hyoid bone) 206 உலும்புகளாகும். இவற்றுள் சில நீள மாகவும், சில குட்டையாகவும், சில தட்டையாகவும், சில ஒழுங்கற்ற வடிவத்திலும் காணப்படும். நீளமான எலும்புகளின் மையத்தில் மிருது வாகவும், கொழுப்புச்சத்து நிறைந்தும் இருக்கும். குழந்தைப்பருவத்தில் இவை வளையும் தன்மையுடனும், நொருங்கும் தன்மையும் கடினத்தன்மை குறைந்தும் இருக்குமாதலால் 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற பழமொழி ஏற்படலாயிற்று எனலாம்.

குழந்தைகளுக்கு ஏற்படும் எலும்புமுறிவு பசுங்கிளை முறிதலுக்கு இணையானது (Green twig fracture) வயது முதிர்ந்தவர்க்கு எலும்பு முறிவு ஏற்பட்டால், முறிந்த பாகங்கள் ஒன்று சேர கால தாமதமாகும்.

இரண்டு மூன்று எலும்புகள் ஒன்ருக சேருமிடத்திற்கு, 'மூட்டுக்கள்' அல்லது 'பூட்டுக்கள்' (Joints) என்று பெயர். மண்டையோட்டில் உள்ளது 'அசையா' (Immovable) வகையைச் சேர்த்தது. தலையில் உள்ள தகடு போன்ற எலும்புகள் ஒன்ருக சேருமிடத்தில், ஹீப்ரூ (Hebrew) பாஷை எழுத்துக்கள் போலிருப்பதால், பண்டைய மக்கள், இவற்றை 'தலை எழுத்து' என்று நம்பி வந்தனர். அசையும் மூட்டுக்கள் (Movable Joints) நாம் நம் கைகள், கால்கள், முதுகு, கழுத்து, இடுப்பு முதலியவற்றை சுலமாக இயக்கவும், திருப்பவும், பெரும்பாலும் உதவும். பரத நாட்டியத்தில் தேர்ச்சி பெற இம்மாதிரி மூட்டுக்களை தக்கபடி இயக்க பயிற்சி தேவைப்படும்.

இவ்வகை மூட்டுக்களைப் பாதுகாக்க விசேஷ அமைப்பு காணப்படும் இவற்றிலுள்ள எலும்புகளின் முனைகள் மிருதுவாகவும், குருத்தெலும்பினுலும் ஆனவை. இவை பிசகாமலும், நழுவாமலுமிருக்க பந்தகங்களால் உறுதியாக பிணைக்கப் பட்டிருக்கும். மூட்டுக்கள் ஓர் உறையினுல் மூடப்பட்டிருக்கும் எந்திர பாகங்கள் சுலபமாக இயங்க, எவ்வாறு ஓர் வித பசை, உயவுப் பொருள் (எண்ணெய், வாஸலீன், போன்றவை) தேவையோ, அதே போன்று இம் மூட்டுக்கள் தங்கு தடையின்றி அசைய ஓர் எண்ணெய் போன்ற பசைப் பொருள் இயற்கையிலேயே நமக்கு ஏற்பட்டிருக்கிறது. வயது முதிர முதிர, இப்பொருளின் சுரக்கும் தன்மை குறைவதால், 'கீல்வாதம்' போன்ற நோய்கள் ஏற்படக் காரணமாகிறது. ஆதலால் தான், நாம் வாரம் ஒரு முறையேனும் (ஆண்கள் பொதுவாக சனிக்கிழமைகளிலும், பெண்கள் வெள்ளிக்கிழமைகளிலும்) எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வது என்ற ஓர் பண்டைய மரபு தென்னகத்திலிருந்து வருகிறது. 'வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு' என்ற பழமொழியும் நெடுநாட்களாக உள்ளது போலும்!

நல்ல எலும்புக் கூடு வளர, தேகப்பயிற்சியும் அவசியமாகும். கோணலாக வளர்ந்துள்ள எலும்புகளைத் திருத்தி சரியான முறையில் வளர்க்க, தேகப்பயிற்சி சிறந்ததொரு சாதனமாகும். இன்னும் சிலர் 'சூரிய நமஸ்காரம்', 'யோகாசனங்கள்', போன்ற பயிற்சியை தொடர்ந்து செய்து வருவதால், திடகாத்திரமாகவும், கட்டுமஸ்தான உடல் வனப்புடனும் காணப்படுகிருர்கள். நீச்சல் அடிப்பது, ஓடி விளையாடுதல், போன்றவையும் எலும்புகளுக்கு சிறந்த பயிற்சி அளிக்கும்.

மற்றும் எலும்புக்கூடு சம்பந்தமான குறைகளாகக் காணப்படும் முட்டிக்கால், வில் போல் வளைந்த கால்கள், கூன் முதுகு, புருக்கூட்டு மார்பு போன்ற நிலைகளை, தக்க உணவு முறைகளாலும் (கால்ஷிய சத்து வைடமின் D சத்து மிகுந்த உணவுப் பொருள்களை, அதிகமாக உட்கொள்ளுவது) தேகப்பயிற்சியினுல் திருத்திக் கொள்ள முடியும் என்பது ஓர் திடமான நம்பிக்கை. இவற்றை ஆரம்பத்திலேயே திருத்திக்கொள்வது தான் சிறந்தது. 'கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' செய்வது போலாகும், நோய் முதிர்ந்த பிறகு குணம் தேடுவது.

ஆகவே நம் உடலிலுள்ள உறுப்புக்களில் முக்கியமான எலும்பு மண்டலத்தைப் பேணிக் காக்க முயற்சிக்க வேண்டியது, ஆரோக்கியமாக வாழ விரும்பும் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய ஓர் கடமை ஆகும்.

நம் உடலிலுள்ள எலும்புகளைக் காட்டும் எலும்பு மண்டலத்தின் படத்தைப் பார்த்து, எலும்புகளின் பெயர்களையும், அவையுள்ள இடத்தையும், அவற்றின் வடிவத்தையும் புரிந்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

---

## அடுத்த இதழில்

## ★ தசை மண்டலம் ★

---

# மனித எலும்புக்கூடு

## (முன்பக்கத் தோற்றம்)

1. நெற்றி எலும்பு
2. கண்ணின் குழி எலும்பு
3, 4. மூக்கு எலும்பும், மூக்குக் குழியும்
5. மேல்தாடை எலும்பு
6. கன்ன எலும்பு
7. கீழ்த்தாடை எலும்பு
8, 9. கழுத்து முள்ளெலும்புகள்
10, 11, 12. மார்பெலும்பின் மேல் முனை, நடுப்பாகம், கீழ்முனை.

## (முன்பக்கத் தோற்றம்)



13. காரை எலும்பு

14, 15, தோள்பட்டை எலும்பு முனைகள்

17, 18, 19, மேற்கை

20. கீழ்க்கை எலும்பு (அல்னு)

21. கீழ்க்கை எலும்பு (ஆர)

22. மணிக்கட்டு எலும்புகள்

23. உள்ளங்கை எலும்புகள்

24, 25, 26, கைவிரல் எலும்புகள்

27, 28, 29, முதுகெலும்புத் தொடரின் முள்ளெலும்புகள், இடுப்பு, குதம், வால் பகுதிகள்.

30 முதல் 37 வரை இடுப்பெலும்பின் பல்வேறு பாகங்கள்.

32 முதல் 42வரை தொடை எலும்பு

43. முழங்கால் சில்

44 முதல் 49வரை கீழ்க்கால் எலும்புகளின் பாகங்கள்

50. கணுக்கால் எலும்புகள்

51, 52, உள்ளங்கால் எலும்புகள்

53. கால் விரல் எலும்புகள்

## (பின்பக்கத் தோற்றம்)



1 முதல் 5 வரை தலை எலும்புகள்
6. முதல் முள்ளெலும்பு (பிடர்)
7. 2-வது முள்ளெலும்பு (பிடர் அச்சு)
8, 21, 22, 23 முதுகெலும்புத் தொடர், முள்ளெலும்புகளின் பின் புறத் தோற்றம்.
9. முதல் விலா எலும்பு
10. காரை எலும்பு
11 முதல் 13 வரை தோள் பட்டை எலும்பு முனைகள்
14. மேற்கை எலும்பு
15. முழங்கை முனை
16, 17 கீழ்க் கை எலும்புகள்
18. மணிக்கட்டெலும்புகள்
19. உள்ளங்கை எலும்புகள்
20. கைவிரல் எலும்புகள்
21. மார்பு பாகத்து முள்ளெலும்புகள்
22. இடுப்பு முள்ளெலும்புகள்
23. திரிக முள்ளெலும்புகள்
24 முதல் 31 வரை இடுப்பு எலும்பின் பல்வேறு பாகங்கள்
32 முதல் 37 வரை தொடை எலும்பின் பாகங்கள்
38 முதல் 43 வரை கீழ்க்கால் எலும்புகளின் பின்புறத்தோற்ற பாகங்கள்
44. கணுக்கால் எலும்புகள்
45. குதிகால் எலும்பு

உ

முருகா.

# திருநீற்றின் மகிமை

திருவருள் தவயோ

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம், மதுரை.

சைவ சமய ஆச்சாரியர்களும், ஆழ்வாராதிகளும், தேவ தேவனாகிய சிவபெருமானையும், மகாவிஷ்ணுவையும், நேரே கண்டு, பரவசப் பட்டுப் பல்லாயிரக் கணக்கான அருட் பாடல்களில் அக் கடவுளாரின் திருவுருவங்களை வருணித்துச் சொல்லி இருக்கிறார்கள். அவற்றுள் சில பாடல்களில் சிவபெருமான் திருநீறு அணிந்திருப்பதைப் பற்றிக் கூறி இருக்கிறார்கள். இறந்தவர்களில் புண்ணிய சீலர்கள், சிவபெருமானை நேரில் தாங்கள் கண்டு அது உண்மைதான் என்று உறுதிப்படுத்தி இருக்கிறார்கள்.

இறந்தவர்கள், பூலோகத்தவரோடு பண்டைக் காலத்திலிருந்தே பல தேசங்களிலும், பல பாஷைகளிலும் பேசி, தங்களுடைய கருத்துக்களையும் விருப்பங்களையும் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பதை, ஆங்காங்கே பேய் பிடித்து ஆடுகின்ற சம்பவங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கின்றன. இறந்தவர்கள் முந்தின பெயரோடும், முந்தின உருவத்திலும், முந்தின உறவு முறைகளோடும், சொப்பன உடலாகிய பாரமில்லாத சரீரத்தோடு ஆவி உலகில் தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கும், அவரவர் இப் பூவுலகில் செய்கின்ற புண்ணிய பாவங்களுக்கு தகுந்த இன்பந்தரும் அருள் நிலையிலும், துன்பந் தரும் இருள் நிலையிலும், வாழவேண்டிய நியதிகள் உண்டு என்பதற்கும், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், சிலப்பதிகாரம், சித்தாந்த சாஸ்திரங்கள், திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், மகாபாரதம், இராமாயணம் முதலிய இந்து நூல்களும், கிறிஸ்தவ வேதப் புத்தகத்தில் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும், திருக்குரானும் சான்றுகள் தருகின்றன.

ஆதலால் இவ்வுலகில் பக்தியுள்ளவர்களும், ஒழுக்கமுள்ளவர்களும் தியாக உள்ளம் உடையவர்களும், விண்ணுலகம் சென்றபின் அங்கிருந்து இவ்வுலகை ஆண்டு வரும் நமது அம்மையப்பனாகிய ஆண்டவனை நேரில் காணலாம் என்பது உண்மையே. அவ்வாறு சிவலோகத்தில் இருக்கிற நமது அம்மை-அப்பனது முக்கிய அடையாளம் நெற்றிக் கண்ணும், நீல கண்டமும், திருநீறும் என்று கண்ட பெரியோர்கள், நன்றி விசுவாசத்துடன் நெற்றிக்கண்ணை நினைவுகொள்ளச் சந்தனம், குங்குமம், அல்லது குங்குமமும், சந்தனமும் கொண்ட திலகமும், நீலகண்டத்தை நினைவு கொள்ள கண்டத்தில் உருத்திராட்சமும், திருநீற்றை நினைவு கொள்ள நெற்றியிலும், அங்கங்களிலும், திருநீறு தரித்து அவைகளைத் தங்களது சமயச் சின்னங்களாகக் கொண்டார்கள்.

நம் செந்தமிழ் நாட்டில் இந்து சமயாச்சாரியர்களில், திருஞான சம்பந்த சுவாமிகள் ஆறும் நூற்றாண்டில் அடியார்களோடு மதுரையில் தங்கியிருந்தார். அன்று அவர் தங்கியிருந்த திருமடமே இன்று மதுரை ஆதீனமாகத் திகழ்கின்றது. அத் திருமடத்தில், சமணர்கள் தீ வைத்த போது அவர் மடத்திற்குள் இருந்தபடியே அதற்குக் காரணமாயிருந்தவன் அன்று மதுரை ஆ[illegible]வந்த கூன் பாண்டிய மன்னனே என்று உணர்ந்து ஒரு [illegible] தேவாரப்பதிகம் பாடி. அதனால் அந்தத் தீ அணைந்ததுமல்லாமல் அந்த செயலு[illegible]க்குப் பொறு[illegible]ளியான மன்னனது உடலில், தாங்கமுடியாத வெப்பு நோயையும் உண்[illegible]ாக்கிற்று. அந்த வெப்பு நோய் சமணர்களால் குணப்படுத்த முடியாததாகி, திருஞான சம்பந்தப் பெருமான், திருநீற்றுப் பதிகம் பாடி மன்னனது உடலில் திருநீறு பூசவே அவ்வரசனுக்குப் பூரண குணம் ஏற்பட்டது. மன்னர் திருநீற்றை அணிந்து வெப்புநோய் நீங்கப் பெற்ற அற்புதத்தை அறிந்த மக்கள் எல்லோரும் திருநீற்றை அணிந்து கொண்டனர். இன்றும் மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் திருமடத்திலுள்ள பூஜை விபூதியானது, சகல நோய்களையும் குணப்படுத்தி வருவதும், பலவித அற்புதச் செயல்களைச் செய்து வருவதும், வியாதிகளைக் குறித்து ஏதும் நேர்ந்து கொண்டவர்களுக்கு குணங் கொடுத்து வருவதும், பக்தர்கள் அனுபவத்தில் அறிந்ததேயாகும்.

## திருநீற்றின் மகிமை

உலகத்தில் உள்ள பொருள்கள் பலவற்றிலும் சாணம் ஒன்றே பிற நாற்றங்களைப் போக்கி, தொத்து நோய்க் கிருமிகளைக் கொன்று, தான் நாறாதிருக்கும் அரிய சக்தி வாய்ந்தது. ஏனைய கிருமிநாசினிகளெல்லாம் விஷக் கிருமிகளைக் கொன்று பிற நாற்றத்தை தன்னுடைய நாற்றத்தால்

தெரியவிடாமல் செய்யுமே தவிர, வேறு எதுவும் உண்மையில் சாணியைப் போல் பிற நாற்றங்களைப் போக்கி, தானும் நாருமலிருப்பதில்லை. விஷக் கிருமிகளைக் கொல்லும் ஆற்றல் சாணிக்கு இருக்கிறதா? என்று யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. அவரைச் செடியில் பூச்சி விழுந்து விட்டால் எருக்கட்டிச் சாம்பலை தூவுவார்கள், அதனுல் பூச்சிகள் மாய்ந்து செடியும் நன்ருக வளரும்.

சாணியின் பஸ்பமாகிய சாம்பலுக்கு பெரிய புழுக்களை கொல்லக் கூடிய ஆற்றல் இருக்குமானுல் விஷக் கிருமிகளைக் கொல்லும் ஆற்றல் உண்டு என்பதை யாவரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதானே? ஆகவே விபூதி எனப்படும் திருநீறு, எல்லாவிதத் தீட்டுக்களையும் போக்கி அதை அணிகிறவரது உடல் நாற்றத்தையும் போக்கித் தூய்மைப் படுத்துகிற தென்பதை, இந்துக்களுணர்ந்தே, சுகாதார முறையிலும், அது நமது உண்மையான அம்மை - அப்பனுகிய ஆண்டவனது சின்னம் என்ற முறையிலும்; நமது நெற்றியில் பூசுவதால் அது புத்திக் கூர்மையையும், ஞாபக சக்தியையும் தரவல்லது என்பதனுலும் அணிந்து வருகிருர்கள். இவற்றை வலியுறுத்தியே "துயிலைத் தடுப்பது நீறு, சுத்தமதாவது நீறு" என்றும் "மாணந்தகைவது நீறு, மதியைத்தருவது நீறு" என்றும் திருஞானசம்பந்தர் அருளியிருக்கிருர்.

## திருநீற்றை உடம்பிலும், நெற்றியிலும் பூசுவதினுல் ஏற்படும் நன்மைகள்

திருநீற்றை உடம்பில் பூசுவதால் தொத்து வியாதிகள் வராமல் தடுக்கலாம். அத்துடன் சிறப்பாக நெற்றியில் பூசுவதால் ஞாபக சக்தியையும், புத்தி கூர்மையையும் அதிகப்படுத்தலாம். நெற்றியில் நினைவு ஆற்றலும், புத்திக் கூர்மையும் இருக்கின்றன. அதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம். சிறு குழந்தைகளை ஏதாவதொரு பாடத்தை மனனம் செய்து ஒப்பிக்கச் சொன்னுல், ஒப்பித்துக் கொண்டிருக்கிறபொழுதே, கண்களை ஏறெடுத்து மேலே பார்ப்பார்கள். நெற்றியைச் சுளித்துச் சற்று சரி பண்ணிக்கொள்ள வேண்டியதிருக்கிறது. பெரியோர்களும் கூட ஏதாவதொன்றை மறந்துவிட்டால் கையில் வைத்திருக்கும் பென்சிலையோ, பேனுவையோ அல்லது விரலையோ கொண்டு நெற்றியில் மெதுவாக தட்டி ஞாபகப் படுத்திக் கொள்ளுவதை யாவரும் அறிவர். [டேப்ரிக்கார்டர்] "ஒலிப்பதிவுக் கருவி" என்ற நவீனக் கருவி மூலம் முன்னே பேசியதைப் பதித்து வைத்துக் கொண்டு, பின் அந்தப் பேச்சை திரும்பவும் பேசுவதை

பார்க்கிறோம். அது போல் தான் நமது நெற்றியும், கடவுள் தந்த "டேப் ரிக்கார்டர்" ஆகும். அது முன்னே படித்ததை, கேட்டதை, அனுபவித்ததை பதித்து ஞாபகத்தில் வைத்துப் பின் நினைவுபடுத்திச் சொல்ல உதவுகிறது. டேப் ரிக்கார்டரில் உள்ள மெல்லிய கருவிகளைத் தூசி படியாமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ, நம் நெற்றியைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியதும் அவ்வளவு அவசியமாகும். பரம்பரையாக நெற்றியில் விபூதி பூசிவரும் குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகள், பள்ளிக்கூடங்களில் எல்லாப் பாடங்களிலும் இலகுவாக மனனம் செய்வதை அனுபவத்தில் பார்க்கிறோம். ஆகவே விபூதி நமக்குக் கடவுள் கொடுத்திருக்கும் டேப் ரிக்கார்டர் கருவியாகிய நெற்றியைச் சுத்தம் செய்து விஷக்கிருமிகளைக் கொன்று அவற்றால் அதற்குப் பழுது வராமல் பாதுகாக்கின்றது.

வெகு நாட்களாக ஒரு கட்சியைச் சேர்ந்தவன் என்பதற்கு அவன் அணிந்து வரும் சின்னமே சான்றாகும். உதாரணமாக காங்கிரஸ் கட்சியின் சின்னம் கதர் ஆடையாகும். அவ்வாறு கதர் ஆடையை வெகு நாட்களாக ஒருவர் அணிந்து வந்தால் அவருக்கு அந்தக் கட்சியில் ஒரு தனி மதிப்பு ஏற்படுகிறது அல்லவா? அது போலவே நமது அம்மை அப்பனது சின்னமாகிய திருநீற்றை வெகுநாட்களாக அணிந்து வந்தால் அந்த ஒன்றினாலேயே திருவடிப்பேறு கிடைக்கும் என்பது திருமூலர் கருத்தாகும். அதனாலேயே,

> கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
> மங்காமல் பூச மகிழ்வாரே யாகில்
> தங்கா வினைகளும் சாரும் சிவகதி
> சிங்காரமான திருவடி சேர்வரே. (திருமந்திரம் : 1666)

என்று அருளியிருக்கிறார் திருமூல தேவர். நமது திருஞான சம்பந்தப் பெருமானார், "வானவர் மேலது நீறு" என்றும், "மேலுறைத் தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு" என்றும், பராவணம் ஆவது நீறு, பாவம் அறுப்பது நீறு" என்றும் சொன்னதின் உண்மையை ஒரு வருஷத்திற்கு ஒரு பாடல் வீதம், மூவாயிரம் பாடல்களில் வேத ஆகமசாரத்தை தமிழில் தந்தருளிய திருமூல தேவர் "திருநீற்றை மங்காமல் பூசி மகிழ்கின்றவர்களது தீவினைகள் அவர்களிடம் தங்காமல் மாண்டுவிடும். அதாவது திருநீறு தீயகருமங்களால் வரக்கூடிய பாவத்தை அழித்துவிடும். சிவகிருபையைத் தரும் திருவடியில் சேர்க்கும்" என்று உறுதியாக கூறுகிறார்.

திருநீறு, பாவத்தைப் பரிகரிக்கும், எல்லா விதத் தீட்டுகளையும் போக்கும். அசுத்தங்களைப் போக்கி சுத்தி செய்யும் என்ற கொள்கையும், அதனைப் பயன்படுத்தும் முறையும் இயேசுநாதர் பிறப்பதற்குப் பல்லாயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்பே இந்தியாவிலும். இந்தியாவைச் சுற்றியுள்ள பிற நாடுகளிலும் இருந்து வந்திருக்கிறது, என்பதற்கு கிறிஸ்து மத வேதப் புத்தமாகிய (HOLY BIBLE) பரிசுத்த பைபிளின் பழைய ஏற்பாடு, ஒரு சிறந்த சான்று தருகின்றது. அதிலுள்ள எண்ணுகமம் 19வது அதிகாரத்தில் கீழ்வரும்வசனங்கள் அதனை யாரும் மறுக்கமுடியாத முறையில் உறுதி செய்கின்றன.

★

## சந்தாதாரர்கள் திருமணம்

வேலூர் பிரபல சித்த மருத்துவரும், ஜெயலக்ஷிமி நிதி லிமிடெட், மானேஜிங் டைரக்டருமான
திரு. P. V. M. குமாரசாமி செட்டியார் அவர்களின்
இளைய குமார்த்தி சௌபாக்கியவதி

**கிருஷ்ணவேணிக்கும்**

சென்னை ஸ்ரீ. ஜி. சண்முகராஜி செட்டியார் மூத்த குமாரன் சிரஞ்சீவி

**எஸ். டில்லிபாட்சாவுக்கும்**

சென்னை தங்கசாலைத் தெருவில் 1—5—66 அன்று காலையில்
திருமணம் விமரிசையாக நடைபெற்றது.

---

அம்பாசமுத்திரம் நமது சந்தா அன்பர் உயர்திரு. வே. ராம. ச.
சண்முக சுந்தர முதலியார் அவர்கள் புத்திரி
திருவளர்செல்வி

**அன்னபூரணிக்கும்**

ஷை ஊர் ஜவுளி வியாபாரம் சி. வெ. ராமய்யா முதலியார் புத்திரன்
திருவளர்செல்வன்

**ஆர். முருகேசனுக்கும்**

அம்பை மணமகன் இல்லத்தில் 27—4—66 அன்று திருமணம்
விமரிசையாக நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்! மானேஜர்: மூலிகை மணி.




[இந்தப் பகுதியில் வாசக அன்பர்கள் தங்களின் வினுக்களை தாராளமாக எழுதி அனுப்பலாம். கூடுமானவரை பலருக்கும் பயன்தரும் கேள்விகளே முதலிடம் பெறும். ரகசிய கேள்விகளை குறிப்பிடும் அன்பர்கள் பெயரைக் குறிப்பிடமாட்டாது. கேள்விகளை எழுதும்போது தெளிவாகவும், முழு விலாசமும், வயதும் குறிப்பிட வேண்டும்.]

கே - ஐயா எனக்கு வயது 30. வாய் நாற்றம் அடித்துவருகிறது. அதோடு இரவு படுக்கையில் உமிழ்நீர் சுரந்து, படுக்கை தலையணையெல்லாம் நனைந்து விடுகிறது. விடியற் காலையில் ஊற்றுநீர் போல் அதிகமாக வந்து மிகவும் தொல்லை படுகிறேன். முதுகு வலி வேறு இருக்கிறது. புகைப் பிடிக்கும் பழக்கமும் உண்டு. எனக்கு இந்த தொந்தரவுகளை நீக்க ஓர் எளிய உபாயம் அருள வேண்டுகிறேன்.

ப - வாயில் அளவுக்கு மீறிய உமிழ்நீர் சுரப்பது நிற்கவேண்டுமானல் முதலில் உமது புகைப் பிடிக்கும் பழக்கத்தை அறவே விட்டு விடுங்கள். பிறகு கடலை எண்ணெ போன்ற எண்ணெ வஸ்துக்கள் கலந்த பலகாரம், கொத்தவரை, பீன்ஸ் போன்ற பித்தநீர் பெருக்கும் காய் வகைகளையும் நீக்கிவிடவும். தினமும் காலையில் வெறும் வயிற்றில்

மஞ்சள்நிற பூ உள்ள கரிசலாங்கண்ணி இலை மட்டும் 20 எடுத்து நீரில் அலசி வாயிலிட்டு மென்று தின்று, பசு மோர் குடிக்கவும். இப்படி 40 நாள் தொடர்ந்து சாப்பிட உமிழ்நீர் சுரப்பது நிற்கும். வாய் நாற்றம் போக விளா மரத்தின் இலை, ஜாதி மல்லி இலை, கிச்சிலி பழத்தோல் இவைகளை சம அளவு கொட்டைப் பாக்களவு வீதம் வாயில் போட்டு மென்று கொப்பளித்து வரவும். மணித்தக்காளி கீரை, முசுமுசுக்கை முருங்கைக் கீரை ஆகியவைகளில் ஏதாவது ஒன்றை நாள்தோறும் பகல் உணவில் சேர்த்து வர உமது தொந்தரவுகள் பணச்சிலவு இல்லாமலே பறந்துவிடும்.

**கே - அடிக்கடி ஜலதோஷம் பிடித்து தும்மலும், மூக்கிலும், கண்களிலும் நீர் வருவதற்கு உடனே நிவாரணம் செய்யக் கூடியது, தமிழ் மருத்துவத் முறையில் எது? அது நள்ளிரவிலும் வீட்டிலேயே சர்வ சாதாரணமாக கிடைப்பதாகவும், ஊசி மருந்துகள் போன்று உடனே ஜலதோஷத்திலிருந்து நிவாரணம் ஆகவேண்டும். எந்த வயது உடையவர்களும் பயன்படுத்துவதாக இருக்கவும் வேண்டும். கூற இயலுமா?**

ப - அடிக்கடி ஜலதோஷம் பிடிப்பது க்ஷயம், காசம், ஆஸ்துமா போன்ற நீடித்த நோய்களுக்கு அஸ்திவாரம் போடுவது போலாகும். இதற்கு ஆங்கில மருந்துகள் மாத்திரை ரூபங்களாகவும், ஊசி மருந்துகளாகவும் ஏராளமாக உற்பத்தி செய்து தலைவலிக்கும், ஜலதோஷத்திற்கும் விற்பனையாகி வருகிறது. இதை வாங்கி காப்பியில் சாப்பிட்டு தற்சமயம் நோயை உள்ளடக்கி விடுவது சகஜமாகிவிட்டது. திரைப் படங்களில் இவ்விதமான மருந்துகளுக்கு ஆடம்பரமான விளம்பரங்களை கொடுத்து நடித்து வேறு காட்டப் படுகிறது. உம்மைப் போன்ற அடிக்கடி ஜலதோஷம், தலைவலி வந்துக்கொண்டிருக்கும் பாமர மக்களும் இம்மாதிரி படங்களை பார்த்ததன் பயனாக, பயனற்ற இம்மாத்திரைகளை விலை கொடுத்து வாங்கி நோய்களை பின்னும் சிக்கலாக்கிக் கொண்டு வேதனை அடைகிறார்கள். ஜலதோஷம் எளிய முறையில் நினைத்தபோது நிவர்த்தி செய்து கொள்ள நமது முறையிலும் உண்டு. ஒரு சுண்டுவிரல் கனமுள்ள மஞ்சள் துண்டை எடுத்துக் கொள்ளுங்கள். (இது வீட்டில் எப்போதும் கிடைக்கும் வஸ்து) இந்த துண்டு மஞ்சளை ஆமணக்கு எண்ணை விட்ட திரிவிளக்கில கொளுத்த நெருப்பு பிடித்து புகை வரும்.

அந்த புகையை இடது நாசி, வலது நாசி ஆக மாற்றி மாற்றி இழுக்கவும். இழுப்பு சரியானதானுல் இந்த புகை மண்டைக்கு ஏறும்போது சுரீர் என்று ஒரு குடைச்சல், நெடிசல் வரும். அதோடு தலைவலி, ஜலதோஷம் நீர் ஒழுகுதல் போன்ற மண்டை சம்மந்தப்பட்டதெல்லாம் நீங்கிவிடும்.

**கே - உடலில் யாது காரணத்தாலோ ரத்தம் குறைந்து விட்டதை நிறை செய்து கொள்ள மாமிச உணவு இல்லாத ஒரு முறையை தெரிவியுங்களேன்.**

ப - சீமை அத்திப்பழம் தினம் ஒன்று எடுத்து அதை ஆழாக்கு பசும்பாலுடன் பிய்த்து போட்டு நன்ருக கொதிக்கக் காய்ச்சி சிறிது கல்கண்டு சேர்த்து தினமும் படுக்கைக்கு போகுமுன்பாக 40 நாளைக்கு குடித்துவர உடலில் ரத்தம் உண்டாகும்.

**கே - தாங்கள் மேக ரோகத்தைப் பற்றி எழுதி இருப்பதில் ஒரு பெண் சூல் கொண்டாள் என்று அறிந்த பிறகு அவளுடன் உறவு வைத்துக் கொள்ளக் கூடாது என்று மறைமுகமாக தெரிவித்து இருக்கிறீர்கள். ஆண் பெண் உறவு கூடாது என்று விவரிக்கக் காணேம். இதில் நான் சந்தேகப்பட்ட காரணம், ஒரு ஆங்கில மருத்துவரிடம் இப்படிப்பட்ட மாதுக்கள் சென்ருல் ஏழு மாதம் வரையில் உறவு வைத்துக் கொள்ளுவது உமக்கும், பிறக்கும் குழந்தைக்கும் நல்லது என்று சொல்லி அனுப்புவதாக கேள்விப் பட்டேன். ஆன படியால் தங்கள் அபிப்பிராயத்தை விளக்கமாக தெரிவிக்க வேண்டுகிறேன்.**

ப - ஆங்கில மருத்துவர் சொன்னுர் என்பதை தேவ வாக்காக மதிக்க வேண்டாம். பகுத்தறிவு கொண்டு சிந்தித்து பார்க்கவும். பகுத்தறிவே இல்லாத கால்நடைப் பிராணிகளும் சூல் கொண்ட பிராணியின் ...................... முகர்ந்து விட்டு உறவுகொள்ள மனமின்றி திரும்பிப் போகின்றன! அதைவிட அறிவு கெட்டவனு மனிதன்? (தாங்கள் விளக்கமாக தெரிவிக்க வேண்டுகிறேன் என்றபடியால் இப்படி எழுத நேர்ந்துவிட்டது. பெரியோர் பிழை பொறுத்தருள்க). இஸ்லாமிய வேதமாகிய குர்ஆன் நூலில் கருவுற்ற மாதருடன் சேர்வதால் பெருநோய் பிடித்த குழந்தைகள் பிறக்கும் என்று கூறுகிறது. எனவே உண்மையை எடுத்துக் கூறும் வேதமே தேவ வாக்கு என்று உணர்க.

கே - சாப்பிட்டு முடிந்தவுடன் குளிர்ந்த பானங்கள் பருகுவது சரியா ?

ப - சாப்பாட்டிற்கு பிறகு குளிர்ந்த பானங்கள் பருகுவதால் பசி மந்தம், அஜீரணம், பெரு ஏப்பம், வாய்வு தொந்தரவுகள் உண்டாகும்.

கே - அலுமினியப் பாத்திரங்களில் விஷம் இருப்பதாகவும், அதில் சமையல், காப்பி போன்றவைகள் தயாரிக்கக் கூடாது என்றும் அதனுல் நாளடைவில் உடல் நலம் கெடும் என்று சொல்கிருர்களே இது சரியா ?

ப - உண்மைதான். அலுமினிய பாத்திரத்தில் காரம், புளி, உப்பு படும்போது அது ரசாயன மாற்றத்துக்குள்ளாகி, கரைந்து புள்ளி களாகி பொத்தல் விழுகின்றன. அலுமினிய பாத்திரங்கள் பழையன வீட்டில் இருந்தால் அதை கவனியுங்கள். இந்த தூள் கரைசல் சாம்பார் ரசம் இவைகளுடன் கலந்து உள்ளுக்கு போன பின்பு நமது உடலும் ரசாயன மாற்றத்துக்கு உட்பட்டு அலுமினிய பாத்திரம் எப்படி அரித்து புரைசல் உண்டானதோ, அந்த மாதிரியே உடலும் காந்தல் ஏற்பட்டு பலவித உஷ்ண வியாதிகளை படிப்படியாக நமக்குத் தெரியாமலே உண்டாக்கி விடுகின்றன.

கே - மனிதராய்ப் பிறந்த நாம் வாழ்க்கையில் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விஷயங்கள் யாவை ?

ப - பெறுவதற்கரிய மானிடப் பிறவியாக பிறந்த ஒவ்வொரு வரும் முக்கியமாக மரணத்தின் தன்மையைத் தெரிந்து கொள்ளுவது அவசியம். வாழ்க்கையை சதம் என்று நினையாமல் நம்மால் உலகத்திற்கு என்ன நன்மை செய்ய முடியுமோ அதை உடனடியாக உயிருள்ளபோதே செய்துவிட வேண்டும். என் வீடு, எனது பொருள், எனது மனைவி, மக்கள், எனது உற்றார், உறவினர் என்று சொந்தம் கொண்டாடுவது பகல் கனவு போல் மாயமாக மறையும் வஸ்துக்கள் என்பதை ஒரு தெலுங்கு கவி மிக தெளிவாக உணர்த்தியுள்ளார் பாருங்கள் :

" மன கண்ணுலோ முந்திரா மனவாள்ளு எந்துரோ
மாயமாய் போயரா மனுஷா ".

எனவே மரணம் வருமுன் பாவ வினைகளை விட்டு புண்ணியமான நற்காரியங்களை செய்தல் வேண்டும்.

**கே - ஒருவருக்கு இருதயத்தில் பலஹீனம், கோளாறு இருப்பது எந்தவித வெளி அடையாளங்களைக் கொண்டு அறிய முடியும்?**

ப - நாக்கை வெளியே நீட்டச் சொல்லிப் பார்த்தால் நாவின் இரு பக்கங்களிலும் கடைவாய் பற்களின் அடையாளங்கள் அடிச்சுவடு போல் பதிந்து காணும். அத்துடன் நாக்கு தடித்தும் வாய்க்கு கொள்ளாமல் பெரிதாக இருக்கும். நுனி நாக்கில் துடிப்பு காணும். காலின் கீழே கணுக்காலைச் சுற்றி வீக்கம் கண்டு இருப்பின் அதிகமான இருதய பலஹீனம் என்று சொல்லிவிடலாம். ஆங்கில மருந்துகளாலும், ஊசி மருந்துகளாலும் சீர்கேடு அடைந்தவர்களுக்கு இருதய கோளாறு உண்டாகுமானால் மர்மகுறியின் உள்ளே சுருக் சுருக் என்று குத்துவலி ஏற்படும்.

**கே - முதுகில் சட்டை நனையும் அளவிற்கு வியர்வை ஏற்பட்டுக் கொண்டு வருவது நல்லதா? கெட்டதா?**

ப - முதுகில் வியர்வை விடுவது சிறுநீர் குண்டிக்காய்கள் பலஹீனமாகி இருக்கும் அறிகுறி. உடம்பில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் வியர்வை காணுவது பிறகு நீடித்த நோய்கள் காணுவதற்கு அஸ்திவாரம் போடுவது போலாகும்.

**கே - வணக்கத்துடன் எழுதிய விண்ணப்பம். தங்களிடமிருந்து வரவழைத்த மூலிகை ரக்ஷை 27—4—66ல் ஏரியில் குளிக்கும்போது காணாமல் போய்விட்டது. ரக்ஷை இருந்த வரையில் மனதுக்கு அமைதியும், சந்தோஷமுமாக இருந்தேன். ஏரியில் பலதடவை மூழ்கி துழாவித் தடவினேன், கிடைக்க வில்லை. இது போனதில் இருந்து மனது நிம்மதி இல்லை. ரொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறேன். 2-வது முறையாக செய்து தருவதாக இருந்தால் உடனே பதில் தெரிவிக்கவும்.**

**எஸ். பி. தங்கதுரை,**

**நெ. 43, சன்னதி தெரு, மதுராந்தகம் போஸ்ட்.**

ப - ஐயா, தங்கள் கடிதம் மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயந்தான். உலகியல் தர்ம நியதிப்படி அவரவர் செய்த நல்வினை, தீவினைகளை அனுபவித்துத்தான் தீரவேண்டும். இந்த சம்பவம் உமக்கு ஓர் சோதனை காலம். எதுவும் இறைவன் கட்டளைப் படியே நடக்கும்.

அஞ்ச வேண்டாம்! மறுபடியும் மூலிகை ரக்ஷை செய்ய இயலாது, அப்படி செய்தாலும் பலன் தராது. வருவது வரட்டும் என்று தைரிய மாக இருங்கள். சனி பகவான் தோஷம் உங்களுக்கு இருக்கிறபடியால் தினந்தோறும் எள்ளும் - பச்சரிசி சோறும் கலந்து பகலில் காக்கைக்கு தவருமல் 1 மண்டலம் வைத்து வரவும். முருகனுடைய நினைவாக 6 மாதம் தள்ளுங்கள். பிறகு எமக்கு நினைவுபடுத்தி எழுதினுல் நிலையை அனுசரித்து ஆவன செய்யலாம். தணிகை சுவாமி விபூதி பிரசாதம் அனுப்பியுள்ளது. அணிந்து அமைதி பெறவும்.

**கே - காவி உடை அணிவதால் உண்டாகும் பலன் என்ன ?**

ப - காவி உடை தரிப்பது நமது நாட்டின் பண்டைய மரபு. குளிப்பதால் உடல் தூய்மையாகிறது. காவி உடையால் உள்ளம் தூய்மையாகும். மனம் அமைதி பெறும். பேரின்ப சிந்தனைகளில் ஈடுபாடு கொள்ளத் தூண்டும். ஆனுல் காவி உடை அணிவோர்களுக்கு சில கட்டுப்பாடும் விதியும் உண்டு. சிற்றின்ப நினைவுகளில் நிலைப் போர்களும், மாமிசம், மது, லாகிரி வஸ்துக்களில் இச்சை கொண்டோரும் காவி உடை அணியக் கூடாது என்று பெரியோர் கூறுவர். காவிச் சாயம் கூட ரசாயன கலர்களைக் கொண்டு துணிகளுக்குச் சாயமேற்றக் கூடாது. நுணா (மஞ்சணத்தி) மரம் போன்ற மூலிகை மரங்களின் இயற்கை சாயத்தால் காவி நிறத்தை துணிகளுக்கு சாயமேற்றி அணிதல் வேண்டும். அப்போதுதான் நற்பலன் கிட்டும். இதன் முழு விபரம்: முதல் பாகம் 'நம் நாட்டு மூலிகைகள்' நூலில் காண்க.

**கே - ஐயா, தற்சமயம் இருக்கும் நிலையில் எவ்வளவோ பேர் குடும்பக் கட்டுப்பாட்டை ஆதரிக்கவே செய்கின்றனர். ஆனுல் அறுத்துக் கொள்ளவோ, நான்கு பேருக்கு தெரிந்தோ செய்வதென்றுல் ஜனங்களுக்கு விருப்பமில்லை. இதற்கு அரசாங்கமோ ஆதரவு தருகிறது. தாங்களும் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு தகுந்த மூலிகையில் சுலபமானது, அருவையல்லாதது, உடம்பை கெடுக்காத மருந்தை தயாரித்து ஆண்பெண் உறவு பாதிக்காத வகையில் விற்பனைக்கு கொண்டு வரலாமே. இதை மூலிகை மணியில் பின்பக்கம் அட்டையில் விளம்பரம் செய்யலாமே. இது எனது அபிப்பிராயம். தங்கள் கருத்து என்ன ?**

**எஸ். எஸ். குமாரசாமி, நெய்வேலி.**

ப- ஓர் உயிரை உண்டாக்கவோ, அதைத் தடை செய்து உற்பத்தியாகாமல் இருக்கவோ நமக்கு உரிமையில்லே. உலக மாயா விநோத நாடகத்தின் கையிருப்பு சந்ததி அல்லது இன விர்த்தி. சிலருக்கு என்ன பாடுபட்ட போதிலும் ஒரே ஒரு குழந்தை பிறக்க வழியில்லாமல் போகிறது. அதோடு அவர்கள் தலைமுறை வழி மூடப்பட்டு விடுகிறது. வேண்டாம்! வேண்டாம்! என்று நினைப்போருக்கு நிறைய குழந்தைகள் நமது இஷ்டப்படியே நடந்தால் இறைவன்தான் எதற்கு? நமக்கு நாமே சிருஷ்டிகர்த்தாவாகி விடுவது போல் இருக்கிறது இந்தக் குடும்பக் கட்டுப் பாடு! அரசாங்கம் ஆதரவு தருகிறது என்பதற்காக பண்பாடற்ற இந்த அறுவை சிகிச்சைக்கு ஆளாகி தற்போது வேதனைப்பட்டு உள்ளம் குமுறி தெரிவிக்கும் பொதுஜனத்தகவல்களை ஒரு பெரிய புத்தகமே எழுதிவிடலாம் மேற்கோளாக ஒன்றிரண்டு தகவல்கள்: (1) ஒரு அன்பருக்கு ஆண் குழந்தை ஒன்று, பெண் குழந்தை ஒன்று இருந்ததாம். இனி குழந்தை வேண்டாம் என்று அறுவை சிகிச்சையில் குடும்பக் கட்டுப்பாடு செய்துக் கொண்டாராம். அதன் பின்பு ஓராண்டில் ஒரு குழந்தையும், இரண்டு ஆண்டு கழித்து மற்றொரு குழந்தையும் இறந்து போய்விட்டது என்றும், இனி குழந்தை பிறக்க வழியுண்டா என்றும் எழுதிக் கேட்டுள்ளார். (2) மற்றொரு அன்பர் எழு குழந்தைக்கு தந்தை. அவர் வாசக்டமி என்ற அறுவை சிகிச்சை செய்துக் கொண்டாராம். அதற்குப் பிறகும் ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளதாம்! (3) ஒரு சகோதரி 4 குழந்தைக் குப் பின் அறுவை செய்துக் கொண்ட பிறகு மூன்று வருடம் கழித்து உடல் ஊதிப் பெருத்து, வயிற்று வலி ஓயாது வந்து எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்க்க புற்றுநோய் வந்துள்ளதாகவும் இதற்கு தமிழ் மருத்து வத்தில் சிகிச்சை உண்டா? என்று கேட்டு எழுதியுள்ளார்கள். இப்படி பல சோக சம்பவ கடிதங்களை கண்ட அடியேனுக்கு குடும்பக் கட்டுப்பாடு மருந்து செய்து விற்று பணம் சேர்க்க அபிப்பிராயம் கூறியிருக்கிறீர்கள். குழந்தை வேண்டாம் என்போர் மனதுக்கு கட்டுப்பாடு விதித்துக்கொண்டு இயற்கை வழியைப் பற்ற வேண்டுமே தவிர செயற்கையில் மனசாட்சிக்கு விரோதமாக முறை தவறிய சிற்றின்ப கருவிகளையோ, சிகிச்சையோ, மருந்துகளையோ கையாள்வது நம் நாட்டுக்கு ஒரு சிறிதும் ஒவ்வாத செயல் என்றே அடியேனுக்குத் தோன்றுகிறது.

கே - மருத்துவ ஐயா, வணக்கம். தாங்களைப் போலவே யானும் பொதுமக்களிடம் பெயரும் புகழும் அடைய வேண்டும் என்று நினைக்கிறேன். தாங்கள் கடைப் பிடித்த வழி யாது? அன்பு கூர்ந்து கூற முடியுமானால் நான் முயற்சி செய்து பார்க்கிறேன்.

ப - அன்புடையீர்! ஒருவருக்கு கீர்த்தியோ, செல்வமோ தன் முயற்சியால் வருவது மிக அபூர்வம்! ஜாதகம் கணிப்போர் கர்பச் செல்லு போக இருப்பு நாழிகை இத்தனைக்கு ஜனனம், என்றுதான் கணிக்கிறார்கள். எனவே, பெயர் புகழ் என்பது எல்லாம் பூர்வ புண்ணிய பாபங்களுக் கேற்றவாறுதான் அமையும். என்றாலும் நாம் மனிதராய்ப் பிறந்ததன் காரணத்தையுணர்ந்து பிறருக்கு உதவி செய்ய நமது வாழ்க்கையை தொண்டாக மாற்றிக்கொள்ள வேண்டும். அடியேன் வாழ்க்கையில் கடைப்பிடித்த வழிகளைக் கூறுகிறேன்: "படுக்கையை விட்டு எழுந்திருக்கு முன்பு முருகனை தியானித்து எழுந்திருப்பேன். சூரிய நமஸ்காரம் 12-ஆண்டு காலமாக செய்து வருகிறேன். பெரியோர்களுக்கும், அறிஞர்களுக்கும் அஞ்சலி செலுத்திப் போற்றுவேன். தன்னை நாடி வருவோரிடம் அன்புடன் பேசி அவர் குறையைப் போக்க முயலுவேன். அடியேனின் தொழிலில் பிறருக்கு உபகாரமாக முடிந்தவரை உதவி செய்வேன். ஆண்டுக்கு ஓரிரு நாள் ஆண்டவன் சந்நிதியில் அடியார்களுடன் சென்று தெய்வத் திருப்பணியில் ஈடுபாடு கொண்டு திருவருளை பலருக்கும் பகிர்ந்து கொடுப்பேன். அந்தி, சந்தி, ஓய்ந்த நேரமெல்லாம் எனது குருநாதர் உபதேசப்படியே எனது இஷ்ட தெய்வத்தின் நாமத்தை இடைவிடாமல் இருதயத்தில் ஒலிக்கச்செய்வேன். இந்த உலகில் எல்லோரையும் உடன் பிறந்தாராக பாவிக்கும் உணர்வையே எனது பிரார்த்தனையில் வேண்டுதல் செய்வேன். அன்னை, தந்தை, குரு, இறை வழிபாடு இவைகளை நாள் ஒன்று ஒருதரமாகிலும் மன - மொழி - மெய் களால் ஏற்றி வழிபடுவேன். தீய வழிகளால் வரும் வருமானத்தை விரும்பமாட்டேன். நாட்டுப் பண்பாட்டை, பழக்கவழக்க ஒழுக்கங்களை வழுவாமல் பின்பற்ற முயற்சித்து வருகிறேன். என்னிடம் பழகுவோருக்கும் அதையே பாடமாக சொல்லுகிறேன். எழுத்துக்களிலும் இதையே நான் வற்புறுத்தி எழுதி வருகிறேன். சினிமாக் காதல் கதைகளையும், நவீன மருந்துகள், மிலேச்ச வைத்திய முறைகளையும் அடியோடு

பெறுக்கிறேன். இதில் முடியாதது ஏதுமில்லை. நீங்களும் கடைப் பிடித்து மன அமைதி பெறலாம் ஆனல் பெயரும் புகழும் அடைய வேண்டும் என்று நினைத்து ஒரு காரியத்தை செய்வதால் (பலனை எதிர் பார்த்து செய்வதால்) பலன் கிடைக்காத போது மனம் சஞ்சலமடைந்து கவலை, கோபம், பொருமை, சூழ்ச்சி செய்தல், பேராசை முதலியவை களால் அமைதியிழந்து தானும் கெடுவதோடு பிறரும் கெட வழி கோலு கிறது. தியாக மனப்பான்மை என்பது எல்லோருக்கும் எளிதில் வராது. தெய்வத் திருவருள் தானே வந்து கிடைப்பது தான் பெயர், புகழ், செல்வம் எல்லாம். ஆகவே எல்லாவற்றையும் தனது என்று எண்ணு மல் 'தெய்வத்திற்கே அர்ப்பணம் செய்து விடல் வேண்டும்' என்பதை உணர்ந்து கடமையைச் செய்து வாருங்கள்.

**கே - அதிக பளுவான சாமான்களை சக்திக்கு மீறி தூக்குவது கூடாது என்கிருர்களே! ஏன்?**

ப - அளவுக்கு மீறிய சக்தி கொண்டு பளுப் பொருள்களை தூக்குவதால் இருதயம் வேகமாக துடிக்கும். இதனுல் பெரு நாடி பெரு நாளங்களில் ரத்தம் வேகமாக பாய்ந்தோடும். இப்படி பாய்ந்தோடும் ரத்தம் இருதயத்தின் அறைகளில் புகுந்து வெளியேறும் போது அளவுக்கு மீறி இருதயம் விரிவடைந்து சில சமயம் இருதய தசைநார்கள் பிளந்து ரத்தம் கசிந்துவிடும். இதை தமிழில் "மார்பில் ரத்தம் விழுந்து விட்டது" என்று கூறுவார்கள். பிறகு என்னதான் சிகிச்சை செய்தாலும் ஓட்டை சட்டிக்கு சமம் தானே உடல். எனவே அதிக பளுவை தூக்கக்கூடாது என்பார்கள்.

**கே - நீர்கடி, காணுக்கடி இவைகளுக்கு பரிபூர்ண சிகிச்சை என்ன? மேல்கண்ட கடிகள் சிலகாலம் சென்ற பின்பு வெளிச் சதையை கோரமாக்குகின்றனவே, இதைப் போக்க என்ன வழி? எளிதில் சிகிச்சை பெற ஒரு வழி கூறவும்.**

ப - சிறு சின்னி என்ற மூலிகையை தினமும் 1 மண்டலம் அறைத்து கொட்டை பாக்களவு தினம் இரண்டு வேளை வெறும்வயிற்றில் சாப்பிட்டு புளி, புகை, போகம் நீக்கி பத்தியம் காத்து நிற்க மேற் குறிப் பிட்ட கடியால் வந்த நாள்பட்ட விஷங்களும் முறிந்து போகும்.

உ

# மூலிகை மணி நிதி நன்கொடை

## இம்மாதம் அனுப்பிய அன்பர்கள்.

| | | | |
|---|---|---|---|
| திரு. | புலவர் சித. சுப்பிரமணியன், திருச்சி-8. | ரூ. 21 | 00 |
| ,, | பி. வி. ராமன், சென்னை. | 10 | 00 |
| ,, | எம். பி. நாகலக்ஷ்மி, சென்னை-4. | 10 | 00 |
| ,, | சி. ராஜு (த. நடராஜன், திருச்சி-8.) | 10 | 00 |
| ,, | கே. பி. சந்திரசேகரன், கள்ளிப்பட்டி. | 10 | 00 |
| ,, | பி. பி. நாராயணசாமி, சென்னை-11. | 10 | 00 |
| ,, | ஜி. கோவிந்தராஜன், மன்னார்குடி. | 10 | 00 |
| ,, | டாக்டர் ஜி. சுப்ரமணியம், கீழ்த்தரியம். | 10 | 00 |
| ,, | கே. ராஜா ஐயர் அட்வகேட், சென்னை-14. | 10 | 00 |
| ,, | வி. எஸ். முதலியார், பெங்களூர்-5. | 10 | 00 |
| ,, | எம். ராஜகோபால், காரிமங்கலம். | 5 | 00 |
| ,, | சிவ. சதாசிவம், வாழப்பாடி. | 6 | 80 |
| ,, | வி. நமசிவாயம், திருமழப்பாடி. | 3 | 25 |
| ,, | எஸ். வேலுசாமி, தென்னிலை. | 3 | 00 |
| ,, | மா. சின்னகுருசாமி ஆச்சாரி, ஒட்டப்பிடாரம். | 2 | 80 |
| ,, | பெ. சி. இராமசாமி ரெட்டியார் | 2 | 00 |
| ,, | டாக்டர் பி. எஸ். கண்ணன், குருமானக்குடி. | 2 | 00 |
| ,, | டி. எஸ். கல்யாணசுந்தரம், சென்னை-1. | 1 | 00 |
| ,, | பி. எம். செல்லையா, புதுப்பாளையம். | 0 | 94 |
| ,, | வி. திருநாராயணன், சீர்காழி. | 0 | 50 |

குறிப்பு:— இதுவரை மூலிகை மணி நிதி நன்கொடையிலிருந்து பல பொது நன்மைக்காக செலவிடப்பட்டது. இந்த இதழிலிருந்து ஒரு ஒரு பகுதியை பத்திரிகை பேப்பர் அரிதாகிவிட்ட படியால் பேப்பர் கொள் முதலுக்கு பயன்படுத்தப் படும். மூலிகை மணிக்கு பேப்பர் கோட்டா பெர்மிட் இல்லாமல் சந்தா நேயர்கள், வாசக அன்பர்கள் ஆதரவிலேயே நடந்து வருவது குறித்து பல அன்பர்களிடமிருந்து மகிழ்ச்சி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளனர். அவர்கட்கெல்லாம் எமது நன்றி.

வாசக அன்பர்கள் இந்த வளர்ச்சி நிதிக்கு ரூ. 10-00 க்கு குறை யாமல் அனுப்பினால் மூலிகை மணி ஆரம்ப (குரோதி விசுவாவசு வரை) இருக்கும் இதழ்கள் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும்.

— **மானேஜர்: மூலிகை மணி**

முருகா.

# இலட்சியவாதி

மு. பெருமாள்

— (சென்ற மாதத் தொடர்ச்சி)

## மணவினை மர்மம்.

என் பிள்ளைதான் அவன். அவனுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்றார் இலட்சியவாதி. தங்கள் பிள்ளைக்கே என் பெண்ணை கொடுத்து விடுகிறோம். நாம் என்ன குலம் கோத்ரம் பார்க்க வேண்டுமா? சீதனம் சிறப்பாக செய்வோம். செலவெல்லாம் எங்களுடையதே. தம்பி உங்கள் சம்மதம் தெரிவித்து தக்க ஏற்பாடு செய்க.

சிந்தித்துச் சொல்கிறேன். மனைவியையும், மகளையும், ஆலோசிக்கலாம். எனக்கு இசைவுதான். மகனைக் கேட்டார் இலட்சியவாதி.

கருப்பாகவுள்ளது வேண்டாம், என்றான் மகன்.

மனைவி, மாமியார் வீட்டிற்குப் போக முடியாத வெளி நாட்டுச் சம்பந்தம் வேண்டாம் என்றான்.

தம்பி நிறத்தில் என்னவுள்ளது? குணத்தில் தானே வாழ்க்கையில் அமைதி காணலாம். கருப்பாக உள்ளதே என இனிப்புத்திராட்சை பழத்தை தள்ளுவாருண்டா? சிவப்பாக அழகாக உள்ளது என எட்டிப்பழத்தை கொள்வாருண்டா? மகனே! நிறத்தையும், அழகையும், கண்டு மயங்கவேண்டாம். அன்பும் அடக்கமும், அறிவுள்ளதா என ஆய்ந்து தேர்ந்து எடுந்துக்கொள். வெளிநாடு, உள்நாடு, என்று வெறுக்காதே. மனங்கொண்ட போது மாமியார் வீடு போகலாம், வரலாம் இதற்காக ஏற்ற பெண்ணை விலக்காதே என்றார் மனைவியிடம் இலட்சியவாதி. நாம் வெளிநாட்டுவாசியாக இருந்தாலும், நம் பெண்ணை கொள்ள ஒருவர் மறுத்தால் நீ என்ன மன வேதனையடைவாய்? என்றார் நம் போன்று பிறரையும் நினைத்திடுக.

முடிவாக மறுத்து விட்டனர் இருவரும்.

இலட்சியவாதி தன் சிங்கப்பூர் தமக்கையாரிடம் திருவருள் கூட்டவில்லை வேறு இடத்தில் பார்த்து விரைவில் மணம் முடிக்கிறேன், கவலை படாதீர் என்றார்.

தம்பி உங்கள் பேச்சை மறுத்தாலும் வற்புறுத்தி முடிக்க உரிமை இருக்க நீங்கள் ஏன் பின்னடைகின்றீர்கள்?

மண விஷயத்தில் வற்புறுத்திச் சுமத்துவது பின்னர் மன வேதனை விளையும் அவரவர் விதி வழியே தான் மதி செல்லும். இதனை உணர்ந்து நாம் விருப்பம் அல்லது நினைவு நிறைவேறவில்லையே என்று ஆசா பங்கமுறக் கூடாது.

என் சகோதரரான நீங்கள் என் பெண்ணைக்கொள்ள மறுப்பது இரக்கமில்லாதச் செயலாகும். இனி உங்கள் உறவே வேண்டாம். என்று வெறுப்புடன் புறப்பட்டாள் சிங்கப்பூர் சகோதரி. மனைவியையும், மகனையும் திருத்தமுடியாத நீர் ஒரு இலட்சியவாதியா? உறவினரைத் திருத்தமுடியாத நீர் ஊரைத்திருத்த முடியுமா?

(தொடரும்)

## கிளிமூக்கு கொன்னை!

பாம்பு கடிக்கு: இதன் விதை 50, மிளகு 18 அறைத்து தண்ணீரில் கலந்து குடிக்கவும். மிச்சம் விழுதியை கடிவாயில் தடவவேண்டும்.

மூல ரோகத்துக்கு: இதன் வேரை எடுத்துச் சூரணித்து பால் காய்ச்சி தயிருக்கு புரை விடும் போது இந்த சூரணத்தையும் சிறிதளவு போட்டு கலக்கிவைக்க தயிராகும் இந்த தயிரைக் கடைந்து வெண்ணை எடுத்து வைத்துக் கொண்டு தினம் இரண்டொரு வேளை தவருமல் கொடுக்க நாள்பட்ட மூலரோகம் விலகும்.

# ★ அத்வைதம் ★

தொ. பொ. மீனுட்சிசுந்தரனர்,
[எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்.,] — சென்ற மாதத் தொடர்ச்சி.

பதினெட்டு பத்தொன்பதாவது நூற்ருண்டுகளில் முதலில் படிக்கின்றவர் கருத்துக்குத் தத்துவக் கருத்தினை எளிதில் விளக்கும் நூல்கள் சைவ மடங்களில் இருந்து கட்டளைகள் என்ற பெயருடன் பல எழுந்தன. இந்த வகையில் அத்வைதக் கொள்கையை விளக்கும் நூல் ஒன்று நாஞசீவ வாதக் கட்டளை என்ற பெயருடன் வெளிவந்தது. கட்டளை நூல்களில் இது தலைசிறந்து விளங்குகின்றது. அத்வைதக் கொள்கைகளைப் பயில்வோர் முதன் முதல் படிக்கும் நூல்கள் இதுவேயாகும்.

தமிழில் இவ்வாறு பல நூல்கள் எழுந்ததன் பயஞகப் பார்பனர் அல்லாதாரும் இக்கொள்கையை தெள்ளத்தெளிய அறிந்து ஒழுகலாயினர் பலர் துறவறம் பூண்டு அனுபூதி கைவரப்பெற்றனர். சில பெண் மக்களும் இதிலீடுபட்டு அனுபூதி பெற்று பல பெண்களை உய்வித்தனர். சாதி மதச் சழக்கினை அறுத்து, மக்களது ஆன்ம நேய ஒருமைப்பாட்டினை வளர்க்கும் பெரு நெறியாக அத்வைதம் இந்த வழியில் வளர்ந்தது. சூத்திர வேதாந்தம் என்று ஒரு சிலரால் இகழப்பட்ட போதும் அஞ்சாது நாட்டிற்கு பெருந்தொண்டு புரிந்தது. சென்ற நூற்ருண்டிலும் இந்த நூற்ருண்டின் முற்பகுதியிலும் அருணசல சுவாமிகள், சச்சிதானந்த சுவாமிகள், பொன்னம்பல சுவாமிகள், நாராயண யோகீந்தரர், இரத்தின செட்டியார், கோ. வடிவேலு செட்டியார் முதலியோர் தமிழ் நாட்டின் ஊர்தோறும் சென்று, இக்கொள்கையை பொது மக்களிடம் பரப்பினர். நூல்கள் பதிப்பித்தனர்; உரைகள் எழுதினர். இதனல் பல மடங்கள் சில நூற்ருண்டுகளாக எழுந்தோங்கி வருகின்றன. காமகோடி பீடத்தினை முன்னரே குறித்தோம். செட்டி நாட்டில் காரைக்குடிக்கருகில் உள்ள கோஷலூர் மடம் பார்ப்பனரல்லாதாரது அத்வைத மடமாகச் சிறந்து தொண்டாற்றி வருகின்றது. இராமகிருஷ்ணரது அடிச்சுவட்டினை பின்பற்றிய விவேகானந்தரது இயக்கத்தில் ஈடுபட்ட மடங்கள் பல தோன்றியுள்ளன. தமிழ் நூல்களும் அச்சாகியுள்ளன. திருவண்ணமலை ரமண நிலையத்திலிருந்தும் நூல்கள் வெளிவருகின்றன.

பாரதியாரது வேதாந்தப் பாடல்கள் இந்தப் பொது நெறியே செல்வனவாம். சித்தாந்தத்தையும் சமரசப்படுத்தி வேதாந்தத்தினை நிலை நாட்ட எண்ணி முயன்ற பெரியோர்கள் பலர். தாயுமானவர், அவிரோத உந்தியார் பாடிய சாந்தலிங்கர், குமாரதேவர், கண்ணுடைய வள்ளலார். இந்நால்வர் நூல்களுள் சிலவற்றுக்கு உரை எழுதிய சிதம்பர சுவாமிகள், இராமலிங்க அடிகள் முதலியோரும் இந்தப் பொது நெறியைச் சேர்ந்த அத்வைத கொள்கையினர். இவ்வாறு நாம் கூறுவதனை மறுப்பவர்களும் உண்டு.

வட மொழியல்லாத பிற மொழிகளிலிருந்தும் பல நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இராமகிருஷ்ணர், விவேகானந்தர், இராமதீர்த்தர், முதலியோருடைய நூல்கள் எத்தனையோ முறை தமிழில் வெளி வருகின்றன. மொழி பெயர்ப்பு நூலையும் காப்பியப் புலவரான சிவப்பிரகாசசுவாமிகள் பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் உலகிற்கு உதவினுர்; கன்னட மொழியில் நிஜகுண முனிவர் எழுதிய வேதாந்த சூடாமணியை இப்பாவலர் பெருமானே மொழி பெயர்த்தார். வேதாந்தம் கற்பார் மிக விரும்பும் நூல்களில் இதுவும் ஒன்று. பத்தொன்பதாம் நூற்றுண்டில் இந்தி மொழியில் உள்ள நூல்களில் ஈடுபட்ட தமிழர் இந்த நூற்றுண்டின் முற்பகுதியில் சில சிறந்த மொழி பெயர்ப்புகளைத் தமிழர்க்குத் தந்திருக்கின்றனர். நிச்சலதாசர் பெயரினை இந்தியாவில் எங்குள்ளவரும் அறிவர். அவருடைய விசார சாகரம் அனுபூதி வெள்ளம்; தென்னுட்டில் கைவல்ய நவநீதம் போல வடநாட்டில் பெருவழக்காக வழங்குவது. அவர் இயற்றிய விருத்திப் பிரபாகரம் ஒரு பெருஞ்சிக்கல். வருந்திப் படிப்பார்க்கு மிகத்தெளிவு வேதாந்தக்களஞ்சியம் என இதனைக் கூறலாம். இந்த இரண்டு நூல்களையும் குப்புசாமி ராஜூ என்ற பெரியார் மொழி பெயர்த்து உதவினுர். இவரும், பிறரும் மொழி பெயர்த்த நூல்கள் இன்றும் பல வடமொழியிலிருந்தும் பஞ்சதசி, நைஷ்கர்ம்யசித்தி, சுவராஜ்ய சித்தி, சங்கரர் பேருரை முதலிய நூல்களும் வெளி வந்துக்கொண்டு இருக்கின்றன.

அத்வைதம் ஒரு பேரனுபவம். அந்த வகையில் அனுபவப் பாடலில் எங்கும் அதனைக் காணலாம். சங்கரர் என்ற தமிழ் மகனுர் அதனை கொள்கையாக நிலைநாட்டி உலகில் பரப்பினுர். பிராமணப் பெருமக்களிடையே சாதி ஒழுக்கத்தினை ஒட்டி அது வளர்ந்து சுமார்த்தரது பிறப்பு கொள்கையாகிவிட்டது; பிறரிடம் சாதி மத சழக்கினை ஒழித்து, ஓர் ஒற்றுமையைத் தமிழ் நாட்டில் நிலைநாட்டி வருகிறது.

— (அடுத்த பக்கம் பார்க்கவும்)

உ

முருகா.

# பாம்பு

எம். ஏ. ரஜ்ஜாக்

பூமியின் மேல் ஜீவிக்க மனிதனுக்கு மட்டும் கடவுள் உரிமை கொடுக்கவில்லை. மனிதனும் மிருகங்களும், மரங்களும், பயங்கரமான விஷ ஜந்துக்களும், மற்றெல்லா ஜீவராசிகளும் பூமியின்மேல் வசிக்கலாம் என்ற கொள்கையைதான் கடவுள் வைத்திருக்கிருர் என்று தெரிகிறது. மனிதனை துரத்தி துரத்திக் கடித்துக் காயப்படுத்தி, சாகடிப்பதற்காக விஷ ஜந்துக்களை கடவுள் படைப்பதில்லை. விஷ ஜந்துக்களாக கடவுள் ஏன் படைத்திருக்கிருர்? என்கிற வாதமும் இதில் கிடையாது.

மனிதனை எந்த விஷஜந்து மிகவும் பயங்கரமாக கொன்று விடுகிறது? மனிதன் எப்படி அம்மாதிரி மரணத்திலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியும்? என்பது தான் விளக்கப்படுகிறது. பொதுவாக, எல்லோருக்கும் தெரிந்த விஷ ஜந்து பாம்பு. இதை கண்டால் எல்லோரும் பயப்படுவது சகஜம். ஆண், பெண், கோழை, வீரன், எல்லோரும் இதைக் கண்டால் பயப்படு வார்கள். யாரும் இதை அருகே சேர்ப்பதற்கு இஷ்டப்பட மாட்டார்கள்.

இது முதுகெலும்புள்ள ஜந்து. இதற்கு கை, கால், காது, கிடையாது தலை உண்டு, வயிறு உண்டு, வால் உண்டு. தலையில் இரண்டு கண்கள் உண்டு. இரண்டு மூக்கு துவாரங்களும் காணலாம். கண்கள் வட்ட மாகவோ, நேராகவோ, அல்லது செங்குத்தாகவோ இருக்கும். கண்களின் மேல் இமை (EYE LIDS) இராது. ஆனதினல் இது கண்களை

---

— முன்பக்கத் தொடர்ச்சி.

சித்தர்களில் பலர் இக் கொள்கையை நிலை நாட்டக் காண்போம். இவர்கள் சமுதாயத் தொண்டில் ஈடுபட்டு வந்ததையும் காண்கிறோம். தமிழ் வளர்த்த பெருமக்கள் பலர் அத்வைத பெருநூல்கள் எழுதி இருக்கக் காண்கிறோம். பொது மக்கட் காப்பியங்களாகப் பல நூல்கள் வெளி வந்திருக்கவும் காண்கிறோம். இன்றும் இந்த உணர்ச்சி தேங்கித் தடைபெருது புத்துயிரோடு ஓடி உலாவி, மக்களைத் தட்டி எழுப்பி வரவும் காண்கிறோம்.

(முற்றும்)

எப்பொழுதும் மூடுவது இல்லை. இதனால் இந்த ஜந்துக்கு பார்வை கூர்மையானது என்று சொல்லலாம். இதனுடைய நாக்கு இரண்டு கிளையுள்ளது. இதற்கு வாய் மிகவும் பெரியதாக செய்யும் இயற்கை சக்தி உண்டு. பாம்பை திருப்பி அடியில் பார்த்தால் முதல் தலை பாகம், இரண்டாவது வயிறு பாகம், மூன்றுவதாக வால் பாகமும் பார்க்கலாம். வயிறுக்கும், வாலுக்கும் மத்தியில் ஒரு துவாரம் காணப்படும். இந்த துவாரத்தின் வழியாக மலம், சிறுநீர் கழிக்கும். முட்டையோ குட்டியோ இதே துவாரத்தின் வழியாகத்தான் வரும்.

பாம்பு தனிமையாக இருக்கத்தான் இஷ்டப் படும். மனிதர்கள் சமீபத்தில் சிட்டுக் குருவி மாதிரியோ, அல்லது வீட்டு எலி மாதிரியோ இருக்க இஷ்டப்படாது. பாம்பு ஒரு பயங்காளி ஜந்து. இது தப்பித்து ஓடுவதற்குதான் பார்க்கும். ஓடுவதற்கு வழி இல்லையென்றால் பாய்ந்து விடும்! யாராவது மனிதனோ, மாடு, ஆடுகளோ அதை மிதித்தால் அது உடனே கடிக்க முயலும். சில பாம்புகள் மரத்தின் மேல் நன்றாக ஏறுவது உண்டு. மரத்தின் மேல் இருக்கிற பாம்பின் வால் மிகவும் மெல்லியதாக இருக்கும். எல்லா பாம்புகளும் தண்ணீரில் நீந்துவது உண்டு. தண்ணீருக்குள் மணி கணக்காக படுத்துக்கொண்டு இருக்கும். பாம்புக்கு தண்ணீர் என்றால் பயமில்லை. தண்ணீரிலேயே இருக்கிற பாம்புகளுக்கு வால் முனை சப்பையாக இருக்கும். நீர் பாம்புகள் பூமியின் மேல் இராது. நீர் பாம்பின் கண்கள் தலையின் மேல் புறத்தில் இருக்கும். பூமியின் மேல் வசிக்கும் பாம்புகளுக்கு கண்கள் தலையின் பக்கங்களில் இருக்கும்.

எல்லா பாம்புகளும் மாமிசம் தின்னும். தன்னுடைய இன ஜந்துவையும் கூட அது (SWALLOW) விழுங்கிவிடும். தன்னுடைய ஆகாரத்தை இது மெல்லுவதில்லை. மெல்லுவதற்கு பற்கள் கிடையாது. ஆகாரத்தை வாயில் இருந்து தப்பித்து வெளியே போகாமல் தடுக்கும் படிதான் இதனுடைய பற்கள் உதவுகிறது. கொல்லைகளில் இருக்கும் எலி, தவளை, முதலிய சிறு ஜந்துக்களை இது பிடித்துக் கொள்ளும். பாம்புகள் இல்லையென்றால் கொல்லைகள் நாசமாகிவிடும். தானியங்கள் கிடைப்பது கஷ்டமாகிவிடும். பாம்புக்கு ஜீரண் சக்தி மிகவும் ஆச்சரியமானது. எலும்பு, குளம்பு, கொம்பு, முதலிய வஸ்துகள் பாம்பின் வயிற்றில் ஜீரணமாகிவிடும்.

ஒரு மாதம் அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை தன்னுடைய தோலை உருவி எடுக்கும். தோல் எடுக்கும் சமயத்தில் மந்தமாகவும், சோம்பலாகவும் இருக்கும். கண் பார்வையும் குறைந்துவிடும். தோல்

இந்த ஓடுகளின் பெயர்கள் ஆங்கிலத்தில் :-




எண் 1. பராண்டல் ஷீல்ட் (ஒன்று)
2. பரைடல் ஷீல்ட்ஸ் (இரண்டு)
4. பரிபராண்டல் ஷீல்ட்ஸ் (இரண்டு)
6. இன்ட்ரா நேஸல் ஷீல்ட்ஸ் (இண்டு)
7. நேஸல் ஷீல்ட்ஸ் (இரண்டு)

---

இந்தப் படத்தில் காட்டியிருக்கிற ஓடுகளை முதல் முதலாக கவனத்தில் வைக்கவும். இந்தப் படத்தைக் கொண்டு இந்த ரகமான பாம்பு என்பதை நிச்சயிக்க ஒரு அஸ்திவாரம் என்று இதைச் சொல்லலாம்.

(தொடரும்)

முருகா.

# சிகா மந்திரம்

திருமுருக.
கிருபானந்தவாரியார் சுவாமிகள்

நமது உடம்பில் சிரசு மேலானது. அதற்கு மேல் இருப்பது சிகை. சிகைக்கு மேல் ஒன்றுமில்லை. எண் சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம். திருவாசகம் எட்டாவது திருமுறை. ஆகவே, சிகா மந்திரமாக விளங்கும் திருவாசகத்திற்கு மேல் சிறந்த நூல் இல்லை.

## திருமுறைகளின் விபரம்

திருநாரையூரிலே பொல்லாப் பிள்ளையாரது திருவருளைப் பெற்ற அருளாளராகிய நம்பியாண்டார் நம்பியவர்கள் திருமுறைகளைப் பதினொன்று என்று தொகுத்தருளினர்.

## திருமுறைத் தொகுப்பு

| | |
|---|---|
| திருஞான சம்பந்தர் தேவாரம் | 3 |
| திருநாவுக்கரசர் தேவாரம் | 3 |
| சுந்தரர் தேவாரம் | 1 = ஆக 7. |

இவை ஏழு கோடி மந்திரங்களைக் குறிக்கும்.

| | |
|---|---|
| திருவாசகமும், திருக்கோவையாரும் | 1 |
| திருவிசைப்பா | 1 |
| திரு மந்திரம் | 1 |
| காரைக்காலம்மையார் முதலிய பலருடைய பாடல்களின் தொகுப்பு | 1 |
| ஆக திருமுறை | 11 |

திருமுறை பதினொன்று என்று ஏன் தொகுத்தார் எனின் நமது சைவ சாத்திரத்தில் மந்திரங்கள் பதினொன்று. இதற்கு மேல் மந்திரமே இல்லை.

## பஞ்ச பிரம்ம மந்திரம் ஐந்து

1. ஓம் ஈசாயனாய நம:
2. ஓம் தத்புருஷாய நம:
3. ஓம் அகோரகராய நம:
4. ஓம் வாம தேவாய நம:
5. ஓம் சத்யோஜாதாய நம:

## சடங்க மந்திரம் ஆறு

6. ஓம் ஹ்ருதயாய நம:
7. ஓம் சிரசே நம:
8. ஓம் சிகாயை நம:
9. ஓம் கவசாய நம:
10. ஓம் நேத்ரோப்யோ நம:
11. ஓம் அஸ்த்ராய நம:

இந்த ஐந்தும் ஆறும் சேர்ந்து சம்மிதா மந்திரம் எனப் பெறும்.

## மந்திரம் கோடி!

ஏழு கோடி மந்திரம் என்றால் நூறு லட்சம் சேர்ந்த ஒரு கோடி என்பது பொருள் கொள்ளக் கூடாது. கோடி என்பதற்கு நுனி என்று பொருள். கோடி வீடு என்றால் தெருவின் முனையில் உள்ள வீடு என்றுதான் பொருள் கொள்ளுகிறோமல்லவா?

(1) நம: (2) ஸ்வதா: (3) ஸ்வாஹா: (4) வஷட்: (5) வௌஷட்: (6) பட்: (7) ஹும்பட்: என்ற இந்த ஏழும மந்திரங்களின் கோடி (நுனி) என்று உணர்க.

## நோய்க்குத் துணை மருந்து போல!

ஒரே மருந்தை நோய்களுக்கு ஏற்றவாறு அநுபானங்கள் பல விதமாக மாற்றித் தருவது மருத்துவ முறை. லிங்கச் செந்தூரத்தை ஓம நீரில் துணையாகத் தந்தால் பேதி நிற்கும். தேனுடன் தந்தால் சுரம் அடிப்பது நிற்கும். அதே லிங்கச் செந்தூரத்தை இஞ்சி நீரில் துணையாக்கித் தந்தால் பித்த நோய்கள் நீங்கும். சுக்கு நீரில் தந்தால் வாய்வு போக்கும். இவ்வாறு அநுபானங்களை மாற்றி ஒரே மருந்தால் பலதரப்பட்ட நோய்களை தணிப்பது போல ஒரு மந்திரத்தை மேல்சொன்ன கோடிகளுடன் கூட்டி உச்சரித்து வெவ்வேறு பயன் பெறுவர்.

## தேவ வணக்கம்

அஸ்த்ர தேவரை வணங்கும்போது **அஸ்த்ராய நம:** என்று கூற வேண்டும்.

அஸ்த்ர தேவருக்கு ஒன்றைத தந்து திருப்தி செய்விப்பதாயின் **அஸ்த்ராய ஸ்வதா:** என்று கூற வேண்டும்.

அஸ்த்ர தேவருக்கு ஒரு பொருளை யாகத்தில் தரும்போது **அஸ்த்ராய** ஸ்வாஹா: என்று கூற வேண்டும்.

ஒரு தீமையை விலக்குவதாயின் **அஸ்திராய பட்:** என்று கூற வேண்டும்.

இவ்வாறு கோடிகளை மாற்றி, மாற்றி மந்திரங்களுடன் உச்சரித்தால் பல நலன்கள் விளையும். இவைகளின் நுணுக்கங்களை மந்திர நூல் வல்லவரிடம் குரு முகாந்திரமாக நேரில் கேட்டுணர்ந்தால் சாலச் சிறப்புடையதாகும்.

எனவே எழு கோடிகளுடன் கூடிய பதினொரு மந்திரங்களுமே பதினொரு திருமுறைகளாகும்

## சிகா மந்திரம்.

நம்பியாண்டார் நம்பிக்கு ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பின் அவதரித்தார் சேக்கிழாரடிகள். இவர் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணம், ஸ்ரீ பஞ்சாட்சரம் போன்ற மகிமையுடையது. ஆகவே பன்னிரண்டாம் திருமுறையாக இதனை அப்போதுள்ள ஆன்ருேர் அமைத்தனர். ஆக திருமுறைகள் பன்னிரண்டாயின. இப் பன்னிரு திருமுறைகளுள் திருவாசகம் எட்டாம் திருமுறை எனப் பெறும்.

முன் கூறிய சம்மிதா மந்திரத்தில் எட்டாது மந்திரம் சிகா மந்திரம். நமது உடம்பில் சிரசு மேலானது. அதற்கு மேல் இருப்பது சிகை. சிகைக்கு மேல் ஒன்றும் இல்லை. ஆகவே சிகா மந்திரமாக விளங்கும் திருவாசகத்திற்கு மேல் சிறந்த நூல் இல்லை. இத்தகைய விழுமிய தோத்திர நூல் திருவாசகமாகும்.

திருவாசகத்தின் பெருமையை நமது இராமலிங்க அடிகளார் கூறுகின்ருர் :—

'' வான் கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தைக்
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.''

'' வாட்டமிலா மாணிக்க வாசக நின் வாசகத்தைக்
கேட்ட பொழுதங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில் இங்கு நானடைதல் வியப்பன்றே.''

எனவே உயிர்கள் மட்டுமல்ல, கல்லையும் கரைக்கும் கனிவுடையது திருவாசகம்! கன்னெஞ்சை நன்னெஞ்சாக்கும் பெருமையுடையது.

கண்ணுதற் பெருமான் — மறைகளையுரைத்த மகா தேவன திருவடி நிலமுற வந்தருளி, தனது திருககரத்தால் எழுதிய பெருமை யுடையது திருவாசகம். இது ஒன்றே திருவாசகத் தனிச் சிறப்பை நனி விளக்கும். ★

உ

முருகா.




— (சென்ற மாதத் தொடர்ச்சி)

## "பசு கடிப்பதன் இயற்கை வெறி நஞ்சு"

தூக்கம் இல்லாது போகும். வாய் வரட்சியாகிவிடும். உதடு ஈரமில்லாமலிருக்கும். பசி, தாகம் இருக்காது.

## "எருமை கடிப்பதன் இயற்கை வெறி நஞ்சு"

குளம், குட்டைகளில் போய் படுக்கப் பிரியப்படல், வாயில் நுரை நுரையாக நீர் வெளிப்படல், இருந்த இடத்திலேயே அசையாமல் இருத்தல் வாயை 'ஆ' வென்று திறந்து இருத்தல், எருமை போல ஒரே சீராக கத்துதல்.

## "பன்றி கடிப்பதன் இயற்கை வெறி நஞ்சு"

மண்ணை வாயில் கவ்வித் தின்றல், வாயில் ஒருவிதமான நாற்ற மடித்தல், ஓரிடத்தில் நில்லாமல் அலைந்து திரிதல், பன்றி போல குர் குர் என்று விட்டு விட்டுக் கத்துதல்.

# இந்த வகை நஞ்சு குறி குணங்கள் நீங்க சிகிச்சை முறை விபரங்கள்

மனிதர்கள் சடித்த இயற்கை வெறி குணங்கள் நீங்க பலகரைப் பற்பம் 5 அரிசி எடை எடுத்து சிறு செருப்படைச் சாற்றில் 3 நாள் காலை மாலை கொடுத்து, உளுந்து சேர்த்த புழுங்கலரிசி கஞ்சி உப்பில்லாமல் கொடுக்க வேண்டும்.

பன்றி கடி நஞ்சுக்கு பலகறை பற்பத்தை பேய் புடல் சாற்றில் 5 நாள் கொடுத்து கோதுமை கஞ்சி உப்பின்றி கொடுக்க வேண்டும்.

எருமை கடி நஞ்சுக்கு கோரைப்புல் சாற்றில் மேல்படி பற்பத்தை 3 நாள் கொடுத்து தினையரிசி கஞ்சி உப்பின்றி கொடுக்க வேண்டும்.

பசுக்கடி நஞ்சு முறிய மேல்படி பற்பத்தை அதே அளவு கருப்பு வெற்றிலைச் சாற்றில் கொடுத்து சாமை அரிசி பொங்கி கஞ்சி கொடுக்க வேண்டும்.

நரிக்கடி நஞ்சு முறிய மேல்கண்ட பற்பத்தை மூங்கில் குருத்துச் சாற்றில் கொடுத்து துவரம் பருப்பு அரிசி சேர்த்த கஞ்சி கொடுக்க வேண்டும்.

நாய்க்கடி நஞ்சு முறிய மேல்படி பற்பத்தை நிலப் பனங்கிழங்கு சாற்றில் 5 நாள் கொடுத்து காராமணி பருப்பு கஞ்சியும் கொடுக்க இயற்கை வெறி கடி நஞ்சு முறிந்து போகும்.

பேய் நரி, பேய் நாய் கடிகளும் அதற்கு சிகிச்சை முறைகள் :—

"தானென்ற பேய் நரிநாய் கடித்ததானல்
தழைத்த மணித்தக்காளி யிலைச்சாறப்பா
பானென்ற படிகால்தான் கொடுப்பாயப்பா,
பாங்காக மூன்று நாளாறு வேளை
கோனென்ற பத்தியந்தா னுப்பாகாது
குணமாகு மேழாநாள் நீரை வாரு
வேனென்ற பேய்நரிநாய்க் கடிதான்தீரும்
விதமாகு மிதன்றழையை மேலேபூசே."

அப்ரக பற்பத்தை ஓரிலைத்தாமரை இலைச்சாற்றுல் கலந்து கொடுக்க பேய்நரி விடம் நீங்கும். பேய்நாய் விடத்திற்கு இதே பற்பத்தை வன்னியை இடித்து பிழிந்த சாற்றில் கலந்து கொடுக்க விடம் யாவும் நீங்கும் என்பதாக தேரையர் வெண்பாவில் காண்கிறோம். ஆனாலும் புலிப்பாணி முனிவர் சொன்ன மேல்கண்ட பாடலின் பொருளாவின்; சுலபமாக எங்கும் எளிதில் கிடைக்கும் ரணித்தக்காளி இலைச் சாற்றை வேளைக்கு கால்படியாக நாளொன்றுக்கு இரண்டு வேளை மூன்றுநாள் ஆறுவேளை கொடுத்து அம்மூன்று நாளும் உப்பில்லாத பத்தியம் வைத்து மறுபத்தியமாக மூன்று நாளும் வறுத்த உப்பு கூட்டிக்கொண்டு, ஒவ்வொரு நாளும் கடித்த வாயில் ரணங்களின் மேல் அந்த இலையையே அரைத்துப் பூசவேண்டும். இதில் பேய்நரி, பேய்நாய் எல்லா கடிவிடமும் தீரும்.

## "குரங்கு கடியின் குணம்"

குரங்கு கடித்தால் குரங்கு மாதிரியே சேட்டை பண்ணுதல், ஆடுதல், பாடுதல், ஆகாயத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டு இருத்தல், கைகால் மடக்காமல் துடித்தல், கூச்சலிட்டு குதித்தல் தாவுதல் சுரம் அடித்தல், பல்லைக் காட்டி இளித்தல் போன்ற சேட்டைகளை உடையதாக இருக்கும்.

(தொடரும்)

★

உ

ஸ்ரீ ராஜ பூஜித மகான்

ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகள் திவ்யசரிதம்.

ஸ்ரீ K. S. V. ரமணி அவர்கள் எழுதிய

புத்தகம் விலை : ரூபாய் 2-00

கிடைக்குமிடம் :- தபால் செலவு தனி.

ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகள் சத்சங்கம்

357, பைகிராப்ட்ஸ் ரோட், சென்னை-14.

# இதய ஒலி!

பேரன்பும் நற்பணி ஆற்றலும் மிக்க 7—5—'66.
டாக்டர் கண்ணப்பர் அவர்கட்கு, வணக்கம். ஈரோடு.

தாங்களும்; தங்கள் குடும்பத்தாரும் எங்களை உங்களுள் ஒருவராக நினைத்து தணிகையம்பதி மேவிய குமரப் பெருமானை சித்ராபௌர்ணமியில் தரிசனம் செய்ய வேண்டிய வசதி செய்து கொடுத்தும், உற்சவ விழாவில் பங்கு கொள்ளச் செய்தமைக்கு எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நம்மோடு சென்னை ராச்சியத்தில் இருந்து வந்து தரிசனம் செய்த ஐந்நூற்றுக்கும் மேலான அன்பர்களுக்கெல்லாம் திருத்தணிகை வேந்தன் திருமுருகக் கடவுள் எல்லா நலமும் அருளும் தருவாராக. இத்தகைய நற்பணி மேன்மேலும் வளர்ந்து நம் நாடு மூலிகையால் செழித்தோங்க வேண்டிக் கொள்ளுகிறோம்.

செல்லம், — பாக்கியம்,
பெரியசாமி கவுண்டர்.

---

23—4—'66.

மூலிகைச் சக்ரவர்த்தியே! வணக்கம். திருப்பத்தூர்.

தாங்கள் தினமணி சுடரில் நீண்ட காலமாக எழுதி வந்த (நம் நாட்டு மூலிகைகள்) பகுதி என்னை மிகவும் கவர்ந்தது. மனித வர்க்கத்திற்கே மாபெரும் நன்மையை பயப்பது. மூலிகைகளின் மகத்துவத்தை மறந்து விட்ட மனித சமுதாயத்திற்கு தங்களது நற்பணி எவ்வளவு பயன்வாய்ந்தது என்பதை அளவிட முடியாது! தங்களை நினைக்கும் போதெல்லாம் என் மனதில் தாங்கள் முருகப் பெருமானுடைய தூதுவராக வந்து மூலிகைகளின் சக்திகளை நல்வழி ஆரோக்கியத்திற்கு பரப்பி வருகிறீர்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. தங்களின் அறப்பணி நீடூழி வாழ்க!

மரிமானிகுப்பம் போஸ்ட். டி. சிகாமணி.

---

29—4—'66.

அன்புடையீர்! சென்னை விமான நிலையம்

தங்கள் நூல்கள் விமான நிலையத்தில் கிடைப்பதில்லை என்பது வருந்தத் தக்க விஷயம். எப்படியாவது அதைக் கண்ணுறும் பொருட்டு நெ. 29, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவில் தேடிக் கண்டுபிடித்து வாங்கினேன். வெளியே போர்டும் கிடையாது. போதிய விளம்பரமில்லை! தமிழ் நாட்டின் சேவைக்கு விளம்பரமும் அவசியந்தான்! குடத்தினுள்ளே கிடக்கும் விளக்கு குன்றின் மேலிட வேண்டும். தங்கள் அறிவாழத்தை பல்வேறு வைத்தியத் துறையிலும் உள்ளது கண்டு வியந்தேன். தங்கள் கருத்து பொன் விளக்காகி முருகன் அருளால் குன்றின் மேலேறி மங்காது மக்களினத்துக்கு பயன் படட்டும்.

மீனம்பாக்கம் போஸ்ட் அன்பன்: பி. வி. ராமன்.

### திருத்தணிகையில்

### மூலிகை மணி ஆசிரியர் வேலூர் டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பர் அவர்களால் 4-5-66 அன்று நடத்தி வைக்கப்பட்ட

# (அபிஷேகமும்) திருமுழுக்கு திருவீதி உலா உற்சவ விமர்சனம்.

ஆண்டு தோறும் மேல்கண்ட நிகழ்ச்சியைக் காணும் வாய்ப்பு கிடைத்தவர்கள் பெரும் பாக்கியசாலியே ஆவார்கள். முதன் முதலாக 1961-ம் ஆண்டு சித்திரை முழுநிலா வொளியில் **தணிகை முருகப் பெருமானுக்கு** திருமுழுக்கு (அபிஷேகம்) செய்யப் போவதாக எனது நண்பர் டாக்டர். கண்ணப்பர் அழைத்துக் கொண்டு போனார். அந்த ஆண்டுதான் தினமணி சுடரில் நம் நாட்டு மூலிகைகள் என்ற தலைப்பில் மூலிகைகளைப் பற்றி கட்டுரை எழுத ஆரம்பித்து இருந்தார். மூலிகை களுக்கு எல்லாம் அரசனாகி விளங்கும் பவரோக வைத்தியநாதப் பெருமானுக்கு சித்திரைத் திருமுழுக்கு விழா செய்யச் செய்ய, மூலிகைகள் எல்லாம் தமிழக மக்களின் உள்ளங்களில் தாண்டவமாடி, எளிய முறை களில் மூலிகைகளால் நோய் தீர்க்கும் உபாயங்கள் தெளிய ஆரம்பித்தது. தணிகை முருகனுக்கு டாக்டர். கண்ணப்பர் அபிஷேகம் செய்யும் நோக்க மும் அதுதானே! உலக மக்கள் எல்லர்ம் அதிக பணம் செலவு செய்து ஆங்கில மருந்துகளால் நோய் பின்னும் சிக்கலடைந்து அகால மரணம் எய்தக் கூடாது. பரம்பரை வழி வந்த எளிய, சுலபமாகக் கிடைக்கும் மூலிகைகளால் நோய் தீர்த்துக் கொண்டு ஆரோக்கிய வாழ்வு பெற வேண்டும் என்பது தான் சித்ரா பௌர்ணமியின் அபிஷேகமும் உற்சவமும்.

இந்த பராபவ ஆண்டு சித்ரா பௌர்ணமி உற்சவ விழாவை கோலாகலமாக, மூலிகை மணி அன்பர்கள் சார்பில் நடத்தி வைக்கப் பட்டது மிகவும் பாராட்டத் தக்க விஷயமாகும்.

தென்னாட்டிலிருந்து ஒரு நாள் முன்னதாகவே அன்பர்கள் திருத்தணியில் கட்டப்பட்ட வேலூர் வணிக வைசியர் சத்திரத்தில் வந்து கூடிவிட்டனர். குறிப்பாக ஈரோடு, திருப்பூர், கோவை, திருச்சி போன்ற இடங்களிலிருந்து எல்லாம் அன்பர்கள் தணிகை முருகன் காட்சியைக் காண வந்திருந்தனர் என்றால் சித்ரா பௌர்ணமியின் மகிமையைச் சொல்லவும் வேண்டுமோ?

இறைவன் திருப்பணிக் காட்சி காண வரும் அடியார்கள் தங்கவும் சாப்பாடு வசதியும் வழக்கம்போல செய்தவை பற்றுக்குறை ஆகிவிடுமோ என்று டாக்டர். கண்ணப்பர் அஞ்சினர். இவைகளை எல்லாம் திருவருள் துணையால் சமாளிக்கப்பட்டது. வெளியூரிலிருந்து வந்த அன்பர்களையும் அடியார்களையும் வரவேற்று, உபசரித்து கண்காணிக்க வென்று மட்டும் டாக்டர். கண்ணப்பர் தன்னுடன் 25 பேர்களை வேலூரிலிருந்து அழைத்து வந்திருக்கிறார். அதில் அடியேனும் ஒருவன்தான்.

கடந்த ஆண்டை விட மும்மடங்கு ஜனக்கூட்டம். மேலும் இந்த ஆண்டு தேவாரம், திருப்புகழ் பாராயணம் செய்ய, இன்னிசைக் கச்சேரி வேறு! காஞ்சீபுரம் திருமுறை பூஷணம் திரு. விநாயக முதலியார் அவர்கள் இசையும், திரு. நாகராஜன் அவர்கள் பிடிலும், வேலூர் திரு. ராஜகோபால் அவர்கள் மிருதங்கம். அபிஷேக விழா அன்று தணிகை மலை மேல், தெய்வீக கான மழைதான் பொழிந்து இசை வெள்ள மாகி பெருக்கெடுத்து ஓடுகிறதோ? என வியப்புறும் வண்ணம் அமைந்து இருந்தது. இடையில் திருத்தணிகை பெருமான் பேரில் பாடிய திருப் பதிகங்களை வாலாஜாபாத் இந்துமத பாடசாலை நா. ப. தணிகை அரசு அவர்கள் இயற்றியதை நமது மூலிகை மணி ஆசிரியர் ஏ. ஆர். கண்ணப்பர் அவர்களால் வெளியீடு செய்தும் ஷ திருப்பதிகங்களில் ஒரு சிலவற்றை திரு. விநாயக முதலியார் இசையுடன் இனிமையாக பாடினர்.

அதன் பின்பு அபிஷேக விழா மாலை $7\frac{1}{2}$-மணியளவில் ஆரம்பித்து பால், தயிர், பன்னீர், பஞ்சாமிர்தம்; விபூதி போன்ற (அபிஷேகம்) திருமுழுக்கு வேதகோஷ பாராயணங் களுக்கிடையே நிகழ்ந்தன! பக்த கோடிகள் மெய் மறந்து முருகனின் அபிஷேகத்தை கண்ணாரக் கண்டு, மனதார மகிழ்ந்து உருகினர். பின்னர் சுவாமி அலங்காரம் நடந்துக் கொண்டிருக்க திருமுழுக்கு தீர்த்தத்தை அனைவருக்கும் கொடுத்து அதனை பக்தியுடன் பருகினார்கள். மற்றும் அலங்கார தூப தீப நைவேத்தியக் காட்சிகளை சேவார்த்திகளுக்கு காண்பித்தார்கள். இரவு $11\frac{1}{2}$-மணி வரை உற்சவ மூர்த்தியை திருவீதி உலாவச் செய்து கொண்டாடியது கண் கொள்ளாக் காட்சியே!பின்பு கண்ணப்பர் மூலிகைரட்சைகளை யெல்லாம் முருகன் திருவடியில் வைத்து சகஸ்ர நாமார்ச்சனை செய்து வேண்டிய அன் பர்களுக்கெல்லாம் வழங்கினர்.

வேலூர் டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பர் அவர்களின் வேண்டுதல் யாவும் முருகப் பெருமானின் திருவருளால் நிறைவேறி வருகின்றதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். 1961ம் ஆண்டு மூலிகைகளைக் காலால் மிதித்து தலை நிமிர்ந்து உல்லாச நடை போட்டு லக்ஷியமின்றிச் சென்றவன் நான். ஆனால் இன்று தலை வணங்கி நடக்கிறேன் பசும் புல் தரைகளைக் கண்ணால் கண்டு மகிழ்கிறேன். ஏதாவது ஒரு செடி கொடி படர்ந்து

இருப்பின், அது என்ன? என்று தலை வணங்கி போய்ப் பார்க்கிறேன். இவை யாவும் வேலூர் டாக்டர் கண்ணப்பர் அவர்கள் இடைவிடாத முயற்சியின் பயனுல் வாரந்தோறும் தினமணிச் சுடரில் எழுதி வரவும், ஆண்டு தோறும் தணிகை முருகனுக்கு திருமுழுக்கு செய்வதனுலும் ஏற்பட்ட பலன் என்ருல் இதை யாரே மறுக்க இயலும்? மற்றும் ஓர் ரகசியம் சித்திரை முழு நிலவில் முருகனின் காட்சியை கண்டவருக் கெல்லாம் மறு பிறவி என்பதே இல்லையாம்! இது ஓர் மஹானின் வாக்கு! அண்மையில் தான் இதை அடியேன் கேள்விப்பட்டேன். இந்த ரகசியம் தெரிந்து தான் ஒரு வேளை கண்ணப்பர் தவருமல் சித்ரா பௌர்ணமிக்கு முருகனிடம் வருகிருரோ? அவருடன் வந்த அடியேனுக்கும் இதே பேறு கிட்டும் என்பதில் ஐயமுண்டோ? இந்த தடவை வராத அன்பர்கள் அடுத்த தடவையாவது கலந்துக் கொள்ளத் தவருதீர்கள்!

அன்பன்: **பி. வி. முதலியார்**

அபிஷேக விழா நன்கொடை வரவு செலவு பட்டியல் தனியாக வெளிவரும்

★

# ஆசிரியர் நன்றியுரை.

திருத்தணிகையில் ஒவ்வொரு சித்ரா பௌர்ணமிக்கும் சுவாமிக்கு திருமுழுக்கு செய்ய; வேலூர் வணிக வைசியர் சத்திரத்தை இலவசமாக விட்டு ஆண்டுதோறும் அடியேனை ஆதரித்து வரும் வேலூர் வணிக வியாபாரிகள் அனைவருக்கும் மூலிகை மணி அன்பர்கள் சார்பில் நன்றியறிதலையும் இதயங் கனிந்த வணக்கத்தையும் செலுத்து கின்றனன்.

இங்ஙனம்,

**ஏ. ஆர். கண்ணப்பர்.**

குறிப்பு:— சந்தா அன்பர்கட்கு திருமுழுக்கு விபூதி பிரசாதம் இம்மாத இதழுடன் அனுப்பப் படுகிறது.

மூலிகை மணி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடுபவரும், ஆசிரியரும் ஆ. இரா. கண்ணப்பர், 33-1, தென்னமரம் தெரு; வேலூர். (வ. ஆ.)